விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email.Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 01 சனிக்கிழமை (13.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 056

## புதிய வகை கொரோனா
# வட மாகாணத்திலும் இனங்காணப்பட்டது

### சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த சைப்ரஸ் நாட்டிலிருந்து வந்தவர்களுக்கு பிரிட்டனில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் நேற்றும் 15 தொற்றாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மருத் துவபீட ஆய்வுகூடங் களில் நேற்று வெள்ளிக் 19

### அச்சுவேலியில் எழுமாற்று பரிசோதனை
## சந்தை வியாபாரிகள் நால்வருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி மரக்கறிச் சந்தையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரி சோதனையில் வியாபாரிகள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளதாக வடக்கு 19

## கொரோனா +936

(கொழும்பு)

இலங்கையில் கொரோ னாத் தொற்றால் பாதிக்கப் பட்டமேலும் +936 பேர் நேற்று அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

அத்துடன் இலங் கையில் கொரோ 19

### தேசிய பிரச்சினைக்கு சர்வதேசம் தீர்வு தரும் என
# தமிழ் மக்கள் கனவு காணக்கூடாது



### காணி விவகார அமைச்சர் சந்திரசேன

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினைகளுக்கு அரசுதான் தீர்வுகளை வழங்கும். அதைவிடுத்து சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கனவு காணக்கூடாது என காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச அரங்கில் அரசைப் பலவீனப்படுத் தவே பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியை தமிழ்த் 19

## அரசிலிருந்து விலகோம்
### அமைச்சர் வாசுதேவ

(கொழும்பு)

அமைச்சர் விமல் வீர வன்ஸ தலைமையிலான தமது அணியினர் அரசாங்கத் தில் இருந்து விலகுவது சூரி யன் மேற்கில் உதிப்பது போன்றது எனவும், அப்படியான சம்பவம் 19

### அடக்கத்துக்கு அனுமதி என்பது
## பிரதமருடைய கருத்து; அது சட்டம் அல்ல
### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

கொரோனாவால் உயிரிழப் பவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்கப் 19

### 20ஆவது திருத்தத்தின் விளைவே
## பிரதமரின் கூற்றை இராஜாங்க அமைச்சரால் மாற்ற முடிந்தமைக்கான காரணம்
### ஜனாஸா அடக்கம் தொடர்பில் கரு ஜயசூரிய

(கொழும்பு)

கோவிட் - 19 ஆல் மரணிப் பவர்களை அடக்கம் செய்வது தொடர்பான பிரதமரின் கூற்றை மாற்றியமைப்பதற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவரால் முடிந்தது, 20ஆவது திருத்தத்தின் எதிர் மறையான விளை வாகும் என முன்னாள் 19

## ரணில் - சஜித் விசேட சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய .தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக் கும் இடையில் விசேட 19

## இறப்பவர்களின் உடல்களை எரிக்கும் முடிவில் மாற்றம் இல்லை

03ஆம் பக்கம் பார்க்க

## கொரோனாவால் மேலும் 5 பேர் பலி
### உயிரிழப்பு 384 ஆக உயர்வு

(கொழும்பு)

கொரோனா தொற்றால் பாதிக் கப்பட்ட மேலும் 05 பேர் நேற்று உயிரி 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# செம்பியன்பற்றுப் பகுதியில் வடிசாராயத்துடன் இருவர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்பியன்பற்று பகுதியில் சட்டத்துக்கு புறம்பான வடிசாராய உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றுக்காவல் நடவடிக்கையில் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சட்டத்துக்குப் புறம்பான வகையில் வடிசாராய உற்பத்தியில் ஈடுபட்ட 25 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 45 லீற்றர் வடிசாராயம் மற்றும் அதனைத் தயாரிப்பதற்கான உபகரணமும் கைப்பற்றப்பட்டது.

மற்றொரு சம்பவத்தில் 65 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து வடிசாராயம் தயாரிப்பதற்கான உபகரணங்கள் கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர்கள் இருவரும் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சிறப்பு அதிரடிப் படையின் வடமராட்சிக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் புஷ்பகுமார தலைமையிலான அணி இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது. (ம-03.33)


மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு

070 640 5951

e-mail : engchelvam@gmail.com

(5641)


# வவுனியாவில் குடும்பஸ்தரை காணவில்லை

## மனைவி பொலிஸில் முறைப்பாடு

(வவுனியா)

வவுனியாவில் 32 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவரை கடந்த 11 நாட்களாக காணவில்லை என அவரது மனைவி வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா - சி ஜீ ஆர் பூங்கா வீதியில் உள்ள 32 வயதான சௌந்தராஜா விஜயகுமார் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த நபர் கடந்த மாதம் 30 ஆம் திகதி பகல் 2.30 மணியளவில் தனது பழக் கடையிலிருந்து வீடு திரும்புவதாக கூறி, அங்கிருந்து வெளியேறி சென்ற நிலையில் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், உறவினர்கள் நண்பர்களின் வீடுகளுக்கும் தொடர்பு கொண்டு கேட்ட போது அங்கும் அவர் இல்லாத காரணத்தினால் குடும்பத்தினர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இவர் தொடர்பில் விபரங்கள் கிடைக்கப்பெற்றால் தமக்கோ அல்லது வவுனியா பொலிஸாருக்கோ தெரியப்படுத்துமாறு அவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

(ம-03.250)


NVQ DMI COMPUTER EDUCATION

TVEC Reg.No.P25/0056 (C-1227)

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் NVQ தகைமை

ICT - NVQ LEVEL- 5

Diploma in Information Technology (Full Time - 1 Year)

NVQ 5 & 6 குறைந்த கற்கைநெறி கட்டணத்தில் ICT துறையில் குறுகிய காலத்தில் அரச பல்கலைக்கழகபட்டதாரி ஆகும் சந்தர்ப்பம்.

பதிவுகளை பெப்ரவரி 20ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் வடமாகாணத்தில் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 15/2/2021 (Mon) 8.30 am

Call now 0777173517

ICT - NVQ LEVEL - 4 (Full Time - 6 Months) | CAA - NVQ LEVEL - 3 (Full Time - 3 Months, Part Time - 6 Months)

DMI COMPUTER EDUCATION

No113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ் ஹோல் அருகாமை) 021 222 4403

M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470

A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி 021 228 5655

0777240707


## பிரபல தமிழாசான் கி. நடராசா அவர்களின் அகவை 75ஐ முன்னிட்டு நூல் வெளியீடு

" கி. நடராசாவின் இலக்கியம் – கல்வியியல் கட்டுரைகள் "




**காலம்**
2021.02.14 ஞாயிற்றுக்கிழமை
மு.ப 9.00 மணி

**இடம்**
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

**தலைமை**
திரு. அ. பௌநந்தி
(எழுத்தாளர், விரிவுரையாளர் - கல்விப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)

**வரவேற்பும் அறிமுகமும்**
திரு. இ.சு. முரளிதரன்
(எழுத்தாளர், ஆசிரியர் - யா/ஹாட்லிக் கல்லூரி)

**வாழ்த்துரைகள்**

- பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- கலாநிதி த. கலாமணி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- திரு. வை. செல்வராஜா (ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்)
- திருமதி பா. அபிராமி (வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)
- திரு. ஈ. தயாரூபன் (பிரதேச செயலர், வடமராட்சி தெற்கு - மேற்கு)
- திரு. க. தர்மலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்)
- திரு. இ. இராகவன் (ஓய்வுநிலை அதிபர்)
- திரு. வே. புவனேந்திரராஜா (அதிபர் - யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

**வெளியீட்டுரை**
திரு. மா. செல்வதாஸ் (எழுத்தாளர், ஆசிரியர் - யா/தேவரையாளி இந்துக் கல்லூரி)

**முதன்மை பிரதி பெறுநர்**
திருமதி புஷ்பவதி சண்முகராசா (அதிபர் - கொக்குவில் ஸ்ரேசன் சி.சி.த.க பாடசாலை)

**கருத்துரைகள்**
பேராசிரியர் கி. விசாகரூபன் (தமிழ்த்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)
திரு. ஆ. நித்திலவர்ணன் (கல்வியியற்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**ஏற்புரை**
கி. நடராசா (ஓய்வுநிலை அதிபர்)

**நன்றியுரை**
திரு. கே. மனோகரன் (ஆசிரியர் - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**சிறப்புற வாழ்த்துகிறோம்**

40 ஆண்டுகளாக எமது சனசமூக நிலையத்தின் தலைவராக இருந்து சேவை புரிகின்ற ஓய்வுநிலை அதிபர், தமிழ் ஆசான் கி. நடராசா அவர்களின் 75 ஆவது அகவையை முன்னிட்டு நாளை (14.02.2021) நடைபெற இருக்கின்ற நூல் வெளியீட்டு விழா சிறப்புற வாழ்த்துவதோடு அவரையும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம். (C-1429)

- பாரதிதாசன் சனசமூக நிலையம்
- பாரதிதாசன் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்
- பாரதிதாசன் முன்பள்ளி
- பாரதிதாசன் விளையாட்டுக்கழகம்

அல்வாய்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா ஏற்பாடு : இ. சு. முரளிதரன், அ.பௌநந்தி, க. பரணீதரன்

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 1949.01.14 — இறப்பு 2021.02.12

எமது கல்லூரியின் பிரதி அதிபர் திரு. ப. கமலதாசன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் **நாகேஷ் பரமநாதன்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா / கனகரத்தினம் ம.ம.வி.

(5645)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
த. அங்கசன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **பகவதிப்பிள்ளை தர்மலிங்கம்**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(C-1428)

# வடக்கிலும் பரவியது புதிய வகை கொரோனா

## மரபணு உயிரியல் நிறுவன பணிப்பாளர் எச்சரிக்கை



(கொழும்பு)

**பிரித்தானியாவில் இனங்காணப்பட்ட B.1.1.7 என்ற புதிய வகை கொரோனா வைரஸ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.**

அதன்படி கொழும்பு, அவிஸ்ஸாவெல்ல, பியகம மற்றும் வவுனியாவில் இருந்து இனங்காணப்பட்ட தொற்றாளர்களுக்கு இவ்வாறு புதிய வகை வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவை மிக வேகமாக பரவக் கூடும் என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மரபணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவர்தன தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் இனங்காணப்பட்ட புதிய கொரோனா வைரஸ், தற்போதுவரை 50 நாடுகளில் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸால், நோயாளர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரிப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

புதிய வைரஸ், உலகம் முழுவதும் புதிய கொரோனா அலையை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாக பிரித்தானிய வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நாள்தோறும் 800 இற்கும் மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில், அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேபோன்று கடந்த சில வாரங்களாக ஒரு நாளைக்கு 50 இற்கும் மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் பதிவாகின்ற நிலையில், வவுனியா மாவட் டம் ஒரு இடைநிலை ஆபத்துள்ள பகுதி எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. (நி-4)

# இறப்பவர்களின் உடல்களை எரிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை

(கொழும்பு)

கொரோனா வைரஸால் மரணிப்பவர்களின் உடல்களைத் தகனம் செய்ய வேண்டும் என்ற சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழுவின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று அந்தக் குழுவின் தலைவர் சட்ட வைத்திய அதிகாரியான சன்ன பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் குறித்த தொழில்நுட்பக் குழுவின் தலைவர் சன்ன பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "அரசியல் தீர்மானங்களுக்காக எங்களின் நிலைப்பாட்டை மாற்றியமைக்க முடியாது"

"விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்ட குழுவால் எடுக்கப்படும் தீர்மானங்களை ஆட்சியாளர்கள் மாற்ற முடியும். அதற்கு எமது குழுவால் எதிர்ப்பு வெளியிட முடியாது. ஆனால், எமது குழுவின் தீர்மானத்தை அரசியல் காரணங்களுக்காக மாற்றியமைக்க முடியாது. கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களைத் தகனம் செய்ய வேண்டும் என்ற சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழுவின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை" என்று சன்ன பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)


## பொது அறிவித்தல்

**திருநெல்வேலி பொதுச்சந்தையில் விவசாய உற்பத்தி பொருட்களிற்கான கழிவு நடைமுறை தொடர்பானது**

- விவசாய உற்பத்திப் பொருட்களிற்கு ஏற்கனவே தடைசெய்யப்பட்ட 10% கழிவு முறை முற்றாகத் தடை செய்வதை உறுதிப்படுத்த இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- விவசாய உற்பத்திப் பொருட்கள் பொதிகளிலிருந்து அகற்றி தரத்தின் அடிப்படையில் நிறை அளவீடு செய்யப்படும்.
- குத்தகைதாரர் உற்பத்திப் பொருட்களிற்கான சரியான நிறை அளவீட்டினை பற்றுச்சீட்டில் பதிந்து விவசாயிகள் / உற்பத்திப் பொருள் கொண்டுவருவோரிடம் வழங்குதல் கட்டாயமானதாகும்.
- உற்பத்திப் பொருட்களிற்கு உரிய நிறை அளவீட்டின்படி பற்றுச் சீட்டு வழங்கப்படாதவிடத்து அதனை கேட்டுப் பெற்றுக்கொள்வது விவசாயிகள் அல்லது உற்பத்திப் பொருட்கள் கொண்டு வருபவர்களது கடமையாகும்.
- குத்தகைதாரரிற்கு உரிய விலையின் 4% வரி விவசாயிகளால் / உற்பத்திப் பொருட்கள் கொண்டு வருபவர்களால் வழங்கப்பட வேண்டும்.
- சந்தை வியாபாரிகள் பற்றுச்சீட்டில் பதிவு செய்யப்பட்ட நிறைக்கு உரிய விலையை விவசாயிகள் அல்லது உற்பத்திப் பொருட்கள் கொண் டு வருபவர்களிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், கழிவு ஏதும் விதிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டால் சந்தை இட ஒதுக்கீடு / வியாபார அனுமதி இரத்துச் செய்யப்படும்.
- உற்பத்தியாளர்கள் இந்நடைமுறைக்கு முரணாக குத்தகைதாரர் மற்றும் வியாபாரிகளுடன் எந்தவித புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும் வருவது தடை செய்யப்படுகின்றது.
- குறித்த விடயம் தொடர்பாக இறுக்கமான கட்டுப்பாடுகள் , மேற்பார்வை இடம் பெறும் என்பதால் சகலரது ஒத்துழைப்பும் கோரப்படுகின்றது.
- முறைப்பாடுகளுக்கு 021 222 2700 / 021 314 2842 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

திரு.ப.மயூரன்
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.
(C-1424) 13.02.2021


# தமிழர் பிரதேசங்களில் தொல்பொருள் ஆய்வுகள் தொல்லியல்பீட பேராசிரியர்களையும் இணைக்க வேண்டும்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் தீர்மானம்

(பச்சிலைப்பள்ளி)

தமிழர் தாயக பிரதேசங்களில் தொல்பொருள் ஆய்வுகளின் போது சர்வதேச ஆய்வாளர்களையும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் பீட பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் இணைத்துக் கொள்வதுடன் ஐக்கிய நாடுகள் மரபுரிமை அமையத்தின் மேற்பார்வையும் வேண்டும் என பச்சிலைப் பள்ளி பிரதேச சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் மாதாந்த பொதுச்சபை அமர்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இங்கு கூட்டத்தை ஆரம்பித்து தவிசாளர் தனது பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதன்போது அவர் தமிழர் தாயக பிரதேசங்களில் தொல்பொருள் ஆய்வு செய்யும் போது எமது அடையாளங்கள் ஆய்வாளர்களாலேயே திட்டமிட்டு மாற்றப்படுவதாக மக்கள் அஞ்சுகின்றனர். இதற்கு உதாரணமாக அண்மையில் குருந்தூர்மலையில் அகழ்வின் போது மேலெழுந்த பல்லவர்கால தாராலிங்கத்தை கூட பௌத்த மத அடையாளமாக சித்திரிக்கின்றது தொல்பொருள் திணைக்களம். இதனால் மக்கள் திணைக்களம் மேல் நம்பிக்கை அற்று இருக்கின்றனர். எனவே மக்களிடம் நம்பிக்கையை உருவாக்க வேண்டுமானால் ஒரு மேற்பார்வையின் கீழ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். இதனை ஏற்றுக் கொண்ட சபையினர் ஏகமனதாக குறித்த தீர்மானத்தை நிறைவேற்றினர். (5-4)

# திருத்த வேலைக்காக சென்ற வடதாரகை 6 மாதமாக காங்கேசன்துறை துறைமுகத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்த வடதாரகை பயணிகள் படகு திருத்த வேலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு ஆறு மாதங்கள் கடந்தும் காங்கேசன்துறை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் அதனை திருத்தி விரைவாக சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகவும் போக்குவரத்தில் தினம் தினம் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பிரதேசமாகவும் நெடுந்தீவு பிரதேசம் காணப்படுகின்றது.

நெடுந்தீவு கடல் மார்க்க போக்குவரத்து சேவைகளில் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வடதாரகை ஆகிய படகுகள் சேவையில் ஈடுபட்டு வந்தன.

இதில் வடதாரகை திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புக்காக கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் கொண்டு செல்லப்பட்டு காங்கேசன்துறை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் சுற்றுலா பயணிகளுக்கு என வட மாகாண சபையினால் வழங்கப்பட்ட நெடுந்தாரகை பயணிகள் போக்குவரத்து படகு மக்கள் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. (நி-4)

# 'அந்த ரூட் மண்டைக்குள்ள ஓடிக் கொண்டிருக்கிறான்டா'

## இங்கிலாந்தை பிளந்துகட்ட ஹோலி வெறியோடு காத்திருப்பு; கூட்டாளிகளுக்கு வீரமான அழைப்பு



பயிற்சியின்போது ஹோலி...

கடந்த டெஸ்டில் களத்தில் நின்று நெருப் பாட்டம் ஆடி இந்தியா வுக்கு குடைச்சல் கொடுத்த ஜோ ரூட் டின் இங் கிலாந் து அணியை ஒரு கை பார்க்க இந்தியா இன்று வெறியோடு களம் காண் கிறது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, அங்கு நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கி றது. முதல் டெஸ்டில் தோற்ற இந்திய அணி 0-1 என தொடரில் பின் தங்கியுள்ளது. இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று ஆரம்ப மாகிறது.

**'ரொப்' தடுமாற்றம்**

இந்திய அணிக்கு 'சீனியர்' ரோகித் சர்மா, 'ஜூனியர்' சுப்மன் கில் சிறப்பான ஆரம்பம் கொடுக்க வேண்டும். கடந்த மூன்று டெஸ்டிலும் ஏமாற்றிய ரோகித் சுதாகரித்தால் நல்லது. 'நடுத்தர வரிசை யில் புஜாரா நம்பிக்கை தருகிறார். அணித் தலை வர் ஹோலியும் போராடு கிறார். ரகானேதான் தொடர்ந்து ஏமாற் றுகிறார்.

இளம் வீரர் ரிஷாப் பண்ட் சிறப்பாக ஓட்டம் குவிக்கிறார். சமீபத்திய போட்டி களில் 97, 89, 91 ஓட்டங்களில் ஆட்ட மிழந்தார் சற்று சுதாகரித்தால் இதை பெரிய ஸ்கோராக மாற்றலாம்.

**தேர்வு எப்படி?**

வெற்றி பெற்றுத் தரும் வகையில் சரியான பந்துவீச்சு கூட் டணியை முடிவு செய்வ தில் பெரிய குழப்பம் நிலவுகிறது. அஷ்வின், பும்ரா சிறப் பாக செயற்படு கின்றனர். இவர்களுடன் அக்சர் படேல் இடம்பெறுவது உறுதி. வோஷிங்டன் சுந்தர் பந்து வீச்சில் சொதப்பினாலும் பேட்டிங்கில் கைகொடுக்கிறார். இதனால் குல்தீப் யாதவ் களமிறங்குவது சந்தேகமாக உள் ளது. தவிர ஹர்திக் பாண்ட்யாவும் அணியில் சேர்க்கப்பட வாய்ப்புள்ளது.

**துடுப்பாட்டம் பலம்**

முதல் டெஸ்டில் சிறப்பாக செயல்பட்ட இங்கிலாந்து அணியின் 'ரொப் ஓர்டரில்' எவ்வித மாற்றமும் செய்யவில்லை. பேர்ன்ஸ், சிப்லே, லோரன்ஸ், போப் என எப்போதும் போல விளையாட காத்திருக்கின்றனர். 'சுவீப் ஷொட்' மன்னன் ஜோ ரூட் இந் திய வீரர்களுக்கு மறுபடியும் தொல்லை கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அண்டர்சன் இல்லை**

பந்துவீச்சில் அண்டர்சன், ரொம் பெஸ், ஆர்ச்சருக்குப் பதில் சென்னை ஆடு களத்தில் சிறப்பாக செயல்படும் பிரோட், மொயீன் அலி சேர்க்கப்பட்டுள்ளனர். பட்லர் இல்லை என்றாலும் போக்ஸ், 'சகலதுறை வீரர்' பென் ஸ்ரோக்ஸ், கடைசி நேரத்தில் துடுப்பாட்டத்தில் கைகொடுக்க வோக்ஸும் அணியில் இடம்பெறவுள்ளனர்.

**முதன் முறையாக ரசிகர்கள்**

கொரோனா காரணமாக ஐ.எஸ். எல்., கால்பந்து, சையது முஷ்தாக் அலி 'ரி20'. ஐ.எஸ்.லீக் கால்பந்து தொடர். சென்னையில் நடந்த முதல் டெஸ்டில் ரசி கர்களுக்கு அனுமதி அளிக்கப்பட வில்லை. இன்று தொடங்கும் இரண்டா வது டெஸ்டில் முதன் முறையாக 50 சத வீத ரசிகர்கள் தினமும் அனுமதிக் கப்பட உள்ளனர். தவிர சேப்பாக்கம் மைதா னத்தில் 9 ஆண்டுகளாக மூடப்பட் டிருந்த ஐ.ஜே.கே கேலரியும் திறக்கப்படுகிறது.

# மே.தீவுகள் ஆதிக்கம்



டாக்கா டெஸ்டில் ஆதிக்கம் செலுத்தும் மே.தீவுகள் அணி, தனது முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தில் 409 ஓட்டங்களை குவித்தபின், அதே ஏற்றத்தை பந்துவீச்சில் காட்ட பங்களா தேஷ் அணி தள்ளாடித்தான் போனது.

பங்களாதேஷ் சென்றுள்ள மே.தீவுகள் அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில் மே.தீவுகள் வென்றது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் டாக்காவில் நடக்கிறது.

முதல் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்ஸில் மே.தீவுகள் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்கள் எடுத்திருந்தது. போனர் (74), டா சில்வா (22) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் முதல இன்னிங்ஸை தொடர்ந்த மே. தீவுகள் அணிக்கு போனஸ் (90) நம்பிக்கை தந்தார். அபாரமாக ஆடிய ஜோஷுவா டா சில்வா (92), அல்சாரி ஜோசப் (82) அரைச்சதம் கடந்தனர். வாரிகன் (2), கேப்ரியல் (8) ஏமாற்றினர்.

முதல் இன்னிங்ஸில் மே.தீவுகள் அணி 409 ஓட்டங்கள் எடுத்தது. கார்ன்வால் (4) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அபு ஜெயத், தைஜுல் இஸ்லாம் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு, மே.தீவுகளின் பந்துவீச்சாளர்கள் நெருக்கடி கொடுத்தனர். ஷனான் கேப்ரியல் 'வேகத்தில்' சவுமியா சர்கார் (0), நஜ்முல் ஹொசைன் ஷான்டோ (4) வெளியேறினர். கார்ன்வால் 'சுழலில்' அணித் தலைவர் மொமினுல் ஹக் (21) சிக்கினார். சிறிது நேரம் தாக்குப்பிடித்த தமிம் இக்பால் (44) ஆறுதல் கொடுத்தார்.

இரண்டாம் நாள் முடிவில் முதல் இன்னிங்ஸில் பங் களாதேஷ் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்கள் எடுத்து, 304 ஓட்டங்களால் பின்தங்கியுள்ளது.

முஷ்பிகுர் ரஹிம் (27), மொஹமட் மிதுன் (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஜோஷுவா

# ரிஷ்வான் கன்னிச் சதம்; பாக் ஜெயம்


சதம் அடித்த மகிழ்ச்சியில் ரிஸ்வான்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் 'ரி20' போட்டியில் மொஹமட் ரிஸ் வான் சதம் கடந்து கைகொடுக்க பாகிஸ் தான் அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் சென்றுள்ள தென்னா பிரிக்க அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி லாகூரில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னா பிரிக்க அணித் தலைவர் கிளாசன் களத் தடுப்பை தேர்வு செய்தார்.

பாகிஸ்தான் அணிக்கு அணித் தலை வர் பாபர் ஆசம் (0) ஏமாற்றினார். அடுத்து வந்த ஹைதர் அலி (21), ஹுசைன் தலாத் (15), இப்திகார் அகமட் (4), குஷ்தில் ஷா (12) நிலைக்கவில்லை.

அபார மாக ஆடிய ஆரம்ப வீரர் மொஹமட் ரிஸ்வான், சர்வ தேச 'ரி20' அரங்கில் தனது முதல் சத மடித்தார். பாகிஸ்தான் அணி 20 ஓவர் களில், 6 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்கள் எடுத்தது. ரிஸ்வான் (104 ஓட்., 64 பந்து, 7 சிக்சர், 6 பவுண்டரி), மொஹமட் நவாஸ் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் பெலுக்வாயோ 2 விக்கெட்டுக் களை வீழ்த்தினார்.

**ஹென்டிரிக்ஸ் ஆறுதல்**

சவாலான இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு ஜேன்மேன் மாலன் (44), ரீசா ஹென்டிரிக்ஸ் (54) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. ஜாக் சின்மேன் (2), டேவிட் மில்லர் (6), அணித் தலைவர் ஹெய்ன்ரிச் கிளாசன் (12), பெலுக்வாயோ (14) ஏமாற்றினர்.

தென்னாபிரிக்க அணி 20 ஓவர் களில், 6 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி யடைந்தது. பிரிடோரியஸ் (15), போர்டு யின் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஹரிஸ் ராப், உஸ்மான் காதிர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் அணி 1-0 என, முன் னிலை பெற்றது. மொஹமட் ரிஸ்வான் ஆட்ட நாயகன் விருது வென்றார்.

# தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் 7 நாட்களுக்குள் தெரிவு செய்யப்பட வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சிஹேவா

**(கொழும்பு)**

**தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரை, கட்சி ஒன்று 7 நாட்களுக்குள் தெரிவு செய்யாவிடத்து குறித்த தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமை வெற்றிடத்தை நிரப்பும் அதிகாரத்தை தேசிய தேர்தல் கள் ஆணைக் குழுவுக்கு வழங்குமாறு புதிய அரசியல் யாப்புக்கான நிபுணர் குழுவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இதனை செய்தி பிரிவுக்கு தெரிவித்தார்.

தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர், கட்சி அல்லது குழுவொன்றினால் 7 நாட்களுக்குள் தெரிவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும் குறித்த 7 நாட்களில் அவ்வாறு ஒருவர் தெரிவு செய்யாவிடத்து அதற்கு பின்னர் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் வெற்றிடமாகவே காணப்படுகின்றன.

எனவே, அவ்வாறு பெயரிடப்படாத சந்தர்ப்பங்களில் அவர்களால் முன்வைக்கப்படும் தேசியப்பட்டியலின், முன்னுரிமை அல்லது வேறு வழிகளில் உறுப்பினரை தெரிவு செய்யும் அதிகாரத்தை தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

அத்துடன், வேட்பாளர் ஒருவர் தேர்தலின் போது செலவான தொகை தொடர்பான தகவல்களை ஆணைக்குழுவுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அவ்வாறு செய்யத்தவறுபவர்களின் பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் போகக்கூடும் என்ற விடயத்தை உள்ளடக்க வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார். (நி-4)

# வர்த்தமானியை யாரும் மதிப்பதில்லை

## மத்தும குற்றச்சாட்டு

(கொழும்பு)



இலங்கையின் அரசியல் வரலாற்றில் வர்த்தமானிக்குரிய மதிப்பையும் பெறுமதியையும் அரசாங்கம் தாழ்வுக் குட்படுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இன்று மக்களும் உரிய தரப்புகளும் வர்த்தமானியை கவனத்தில் கொள்வதில்லை எனவும் அவர் மேலும் குற்றச் சாட்டியுள்ளார்.

கொழும்பு எதுல்கோட்டேயில் அமைந்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நுகர்வோருக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைத்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரித்துள்ளது. இதற்கு முன்னரும் எண்ணிடங்காத வர்த்தமானிகளை வெளியிட்டுள்ளனர். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட விலைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு சந்தையில் பொருட்கள் இல்லை.

பாராளுமன்றத்தில் கொரோனாவினால் மரணிப்பவர்களைப் புதைப்பதற்குரிய அனுமதியை வழங்குவதாக பிரதமர் அறிவித்திருந்தார். அடுத்த நாள் பாராளுமன்றத்தில் அமைச்சர் வேறு விதமாகக் கூறினார்.

மொட்டு கட்சியின் ஊடக சந்திப்பில் பிறிதொரு உறுப்பினர் வேறு விதமாக பிரதமரின் கருத்தைக் குறிப்பிட்டார்.

அது சாதாரண மரணங்களுக்குரிய அனுமதி என்பதைத் தான் பிரதமர் கூறியதாகக் குறிப்பிட்டார்.

பிரதமரின் கருத்தை விட சாதாரண ஒரு உறுப்பினரின் கருத்து பலமிக்கதா? பிரதமரின் கருத்தை இழிவுபடுத்தும் விதமாகச் செயற்படுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)



வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் **Help by group of friends** அமைப்பின் நிதி உதவியுடன் பாடசாலை சிறார்கள் 15 பேருக்கு 55,000 ரூபாய் பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் மாற்றுவலுடைய 16 பேருக்கு தலா 4000 ரூபா பெருமதியான உலர் உணவுகளும் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவை பிரிவினால் வழங்கி வைக்கப்பட்டது. (படம்:- மகாலிங்கம்)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர். திருமதி. விசுவலிங்கம் நாகேஸ்வரி

பிறப்பு 16 . 08 . 1939

இறப்பு 25 . 02 . 2020



எம் வாழ்வு சிறந்திட
எம்மை எல்லாம் உயர்வுபெற
உங்களின் தியாகம்
உன்னதமானதம்மா
உங்கள் நினைவுகளுடனேயே
என்றும் வாழ்ந்திடுவோம்.

**கடந்த 25.02.2020 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கு அமரர். திருமதி. விசுவலிங்கம் நாகேஸ்வரி அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனை 13.02.2021 இன்று சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.**

கும்பிழாவளை மேற்கு,
அளவெட்டி.

(5610)

குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர்: ஆழ்வார் கந்தசாமி

(ஓய்வுபெற்ற இ.போ.ச.பண்டகசாலை பொறுப்பாளர்)



தோற்றம் 25 . 03 . 1945

மறைவு 08 . 03 . 2019

**எம்மை வீட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஓடினாலும் எம் இதயத்தில் கூர்விட்டு எரிந்து ஒளிதந்து எமக்கு ஆசி வழங்கும் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல தச்சையெம் பெருமாளை பிரார்த்தித்து நிற்கின்றோம்.**

(C-1420)

தச்சந்தோப்பு வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

# வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள இடைக்குறிச்சி மாசேரி எல்லை வீதியாகவும் கொடிகாமம்-பருத்தித்துறை வீதியுடன் இணைக்கின்ற வாழைத்தோட்டம் வீதியானது 50 வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்பும் இன்றி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

அத்துடன் கற்கள் சிதைவடைந்து மணல் வீதியாக மாறியுள்ளது. இவ்வீதி சுமார் 14 கிலோமீற்றர் தூரம் கொண்டதாகும்.

யுத்த சூழ்நிலையின் போது இவ் வீதி பற்றைகள் மூடி போக்குவரத்திற்கு ஏற்ற வீதியாக இருக்கவில்லை. அதுமட்டுமன்றி இராணுவ முகாம்கள் அமைந்திருந்தமையால் இந்த வீதியை மக்கள் பயன்படுத்த அஞ்சினர். மாற்றுப் பாதைகளின் ஊடாகவே தமது தேவைகளை நிறைவேற்றினர்.

இராணுவத்தினர் இப்பகுதியை விட்டு வெளியேறிய பின் மக்கள் இந்த வீதியை போக்குவரத்திற்குப் பயன்படு த்தினர்.

மேலும் பற்றைகள் மூடியிருந்தமையால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை காணப்பட்டது. சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவையே பயணிக்கக் கூடியதாக இருந்தது.

அது மட்டுமின்றி வழிப்பறிகளும் திருடர் தொல்லைகளும் அதிகரித்துக்காணப்பட்டன. இந்த நிலைமை தொடர்பாக இப் பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு



சென்றமையைத் தொடர்ந்து பிரதேச செயலகத்தின் மூலம் இவ்வீதியை மூடி இருமருங்கிலும் காணப்பட்ட பற்றைகள் ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

தற்போது பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், வாகன சாரதிகள், பொதுமக்கள் எனப் பலரும் இவ்வீதியை அதிகம் பயன்படுத்துகின்றனர்.

வீதி புனரமைப்பு செய்யப்படாமையால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர். இவ்வீதியைப் புனரமைக்குமாறு அரசியல் வாதிகள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே அதிகளவானோர் பயன்படுத்தும் இவ் வீதியை விரைவாக புனரமைப்பதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கையெடுக்க வேண்டும் என பொது மக்கள கோரிக்கை முன்வைக்கின்றனர். (5-4-103)

# இலவச சித்திர வகுப்புக்கள் மீள ஆரம்பம்

(குப்பிழான்)

உடுவில் கலாசார மத்திய நிலையம் சுன்னாகம் பொதுநூலகத்துடன் இணைந்து நடத்தும் இலவச சித்திர வகுப்புக்கள் கடந்த திங்கட்கிழமை முதல் சுன்னாகம் பொதுநூலகத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அங்கத்துவக் கட்டணமாக 300 ரூபா மாத்திரமே செலுத்த வேண்டும். வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்படும். வகுப்புக்கள் வாரத்தில் செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பிற்பகல் 4 மணியளவில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக வகுப்புக்கள் இடம்பெறும்.

இதேவேளை, குறித்த வகுப்புக்களில் இணைந்து பயில விரும்பும் மாணவ- மாணவியர் சுன்னாகம் பொது நூலகத்திற்கு நேரடியாக வருகை தந்து தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என சுன்னாகம் பொதுநூலக பிரதம நூலகர் திருமதி ஜெயலட்சுமி சுதர்சன் அறிவித்துள்ளார்.(5-4-18)

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு வியாபாரிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வரணி பொதுச்சந்தையானது வரணி கிராம மக்கள் எல்லோரும் பயன்படுத்தும் பொதுச்சந்தையாகும்.

இங்கு சில அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லையென வியாபாரிகள், பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். குறிப்பாக நீர் வசதி செய்து தரப்படவில்லையெனவும் அங்குள்ள கிணற்று நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல எனவும் பல வருடங்களாக கிணறு இறைக்கப்படாமல் உள்ளது எனவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று மின்சார வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் இங்கு அமைக்கப்பட்டுள்ள இரு மலசல கூடங்களும் புனரமைக்கப்படாமல் பராமரிப்பு இன்றி காணப்படுகிறது என வியாபாரிகள் குறைபடுகின்றனர்.

தம்மிடம் இருந்து பிரதேச சபையால் வரி அறவிடப்படுவதாக வியாபாரிகள் தெரிவிப்பதுடன் சந்தையில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறும் பிரதேச சபையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-103)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழக்கு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.00 மணியளவில் கமநல சேவை நிலைய கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே அமைப்பின் அங்கத்தவர்கள் தங்களது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்தி இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு காரைநகர் கிழக்கு அமைப்பின் செயலாளர் இ. திருப்புகலூர் சிங்கம் அறிவித்துள்ளார்.(5-4)



குப்பிழான் தெற்கு தைலங்கடவை ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. (படம்: ரவிசாந்)

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகத் தெரிவு நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும். எனவே பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் ரி.மனோகரன் அறிவித்துள்ளார். (5-4)

# 5 வருடங்களுக்கு மேல் பணியாற்றும் அதிகாரிகளை இடமாற்ற வேண்டும்

## நகரசபை உறுப்பினர்கள் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு உடன் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே சபை உறுப்பினர்கள் இதனை வலியுறுத்தியிருந்தனர். இது தொடர்பாக நகரசபை உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

அரச திணைக்கள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை ஐந்து வருடங்களுக்கு மேலாக இட மாற்றம் இன்றி வைத்திருக்க வேண்டிய தேவை இல்லை.

ஐந்து வருடங்களுக்கு மேலாக இடமாற்றம் இல்லாமல் அதி காரிகளை வைத்திருப்பதால் அவர்கள் அரசியல் ரீதியாகவும் பக்கச் சார்பாகவும் நடக்கக் கூடும். இதனால் மக்கள் பாதிப்படைகின்றனர்.

மக்களின் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாகின்றது. நீண்டகாலமாக இடமாற்றம் இன்றி இருக்கும் இவ்வாறான அதிகாரிகளை சாவகச்சேரி நகரசபை உடனடியாக உரிய திணைக்களத்திற்கு சபையின் தீர்மானத்தை தெரியப்படுத்தி இடமாற்றம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

சபையின் தீர்மானத்தை நகரசபை நடைமுறைப் படுத்தத் தவறினால் சபை உறுப்பினர்கள் இணைந்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்போம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (5-4-30)



யாழ்ப்பாணம் இலங்கை வங்கியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையினரால் சுன்னாகத்தில் அமைந்துள்ள அச்சிலியம் இல்லத்திற்கு ஒரு தொகுதிப்பொருட்கள் வழங்கப்பட்டன. சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பொதுமக்களுக்காக மூன்று குழாய்க்கிணறுகள் அமைந்துக்கொடுக்கப்பட்டன. மாதகல் புனித தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை சிறுவர் மகிழ்விடம் புனரமைக்கப்பட்டது. யாழ்.போதனா வைத்தியசாலையின் புனரமைப்பு அலகில் உள்ள கட்டடத் தொகுதியின் ஒரு பகுதி கொவிட்-19 தீவிர சிகிச்சை நிலையமாக புனரமைக்கபட்டுள்ளது.

# நாட்டின் பொருளாதாரத்தை மீட்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தேவை

(கொழும்பு)

பணம் அச்சிடுவதால் நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதனால் அரசாங்கத்திற்கு இருக்கும் ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முன்வருவதாகும் என ஹர்ச சுட்டிக்காட்டியுள்ளார். இந்த வருடத்தில் 6 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் செலுத்த வேண்டியுள்ளதாக மத்திய வங்கி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனை எவ்வாறு செலுத்துவது என ஹர்ச கேள்வி எழுப்பினார். கடன் பெற்றுக் கொண்ட தரப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்த பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டியதுடன் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையும் நாட வேண்டும் எனக் கூறிய ஹர்ச டி சில்வா இவ்வாறு இன்றேல் நாட்டு மக்கள் மீதே அதிக சுமைகள் சுமத்தப்படும் எனவும் பாராளுமன்றில் உரையாற்றினார். (நி-4)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் - 2021

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் மாசி மாதம் 24 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் 06 அமர்வுகளாக நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறுவோருக்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் பல்கலைக்கழக ஆவணக் காப்பகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக்கொள்ளும்போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

தமக்காக குறித்தொதுக்கப்பட்ட பட்டமளிப்பு அமர்வு விபரங்களையும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையின் அறிவித்தல் பலகையிலும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி **www.jfn.ac.lk**

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 18.02.2021<br>வியாழக்கிழமை | மு. ப. 09.00 - பி.ப. 12.30<br>பி. ப. 01.30 - பி.ப. 03.30 | • கலைமாணி (சிறப்பு)<br>• கலைமாணி (பொது)<br>• சட்டமாணி |
| 19.02.2021<br>வெள்ளிக்கிழமை | மு. ப. 09.00 - பி.ப. 12.30<br>பி. ப. 01.30 - பி.ப. 3.30 | • வியாபார நிர்வாகமாணி (பொது)<br>• வியாபார நிர்வாகமாணி (சிறப்பு)<br>• வணிகமாணி<br>• நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம்)<br>• நுண்கலைமாணி (பரதம்)<br>• நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) |
| 20.02.2021<br>சனிக்கிழமை | மு. ப. 09.00 - பி.ப. 02.00 | • கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு), (பொது) 2017<br>• கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு), (பொது) 2018<br>• விஞ்ஞானமாணி (சிறப்பு), (பொது) 2017<br>• விஞ்ஞானமாணி (சிறப்பு), (பொது) 2018<br>• பிரயோக விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி<br>• சித்தவைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி 2017<br>• சித்த வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி 2018 |
| 21.02.2021<br>ஞாயிற்றுக்கிழமை | மு. ப. 09.00 - பி.ப. 02.00 | • கலாநிதி<br>• முதுமெய்யியல்மாணி<br>• பண்பாட்டுக்கலையில் முதுகலைமாணி<br>• சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி<br>• முதுவியாபார நிர்வாகமாணி<br>• கல்வியியலில் முதுமாணி<br>• கல்வியியலில் பட்டப்பின் தகைமைச்சான்றிதழ் (முழுநேரம்) 2017<br>• கல்வியியலில் பட்டப்பின் தகைமைச்சான்றிதழ் (முழுநேரம்) 2018<br>• இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் |
| 22.02.2021<br>திங்கட்கிழமை | மு. ப. 09.00 - பி.ப. 12.30<br>பி. ப. 01.30 -பி.ப. 03.30 | • வைத்தியமாணி மற்றும் சத்திரசகிச்சைமாணி<br>• தாதியியலில் (சிறப்பு)விஞ்ஞானமாணி 2017<br>• தாதியியலில் (சிறப்பு)விஞ்ஞானமாணி 2018<br>• மருந்தகவியல்மாணி (சிறப்பு) 2017<br>• மருந்தகவியல்மாணி (சிறப்பு)2018<br>• மருத்துவ ஆய்வுகூட (சிறப்பு) விஞ்ஞானமாணி 2017<br>• மருத்துவ ஆய்வுகூட (சிறப்பு) விஞ்ஞானமாணி 2018<br>• விவசாய விஞ்ஞானமாணி<br>• பொறியியல் விஞ்ஞானமாணி |

குறிப்பு:

1)பட்டதாரி மாணவர்கள் தொழில் பெறு இயலுமைக்கான கேள்விக் கொத்தினைப் பெற்று, முறையாகப் பூரணப்படுத்தி பட்டமளிப்பு அங்கிகளைப் பெறுவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

2)பல்கலைக்கழகத்திற்கு வரும் பட்டதாரிகள் கொவிட் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல் கட்டாயமானது.

(C-1422)

பதிவாளர்


### அளுத்கம பேருவளை வன்முறை விவகாரம்

# ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்-ஆணைக்குழு அறிக்கை

(கொழும்பு)

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டுகளை சுமத்துமாறு ஆணைக்குழு பரிந்துரைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு அளுத்கம பேருவளையில் இடம் பெற்றவன்முறைகளிற்கு காரணமாகவிருந்தார் என்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணைக்குழு பரிந்துரைந்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத மற்றும் இன ரீதியிலான குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு காரணமான நடவடிக்கைகளில் ஈடுபட உதவிய நபர்கள்மற்றும்அமைப்புகளை அடையாளம் காண்பதற்கு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையிலேயே ஞானசார தேரருக்கு எதிராக ஆணைக்குழு குற்றவியல் நடவடிக்கைகளிற்கு பரிந்துரைத்துள்ளது.

எனினும் இது குறித்து தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# லுணுகல, எகிரியா பகுதிகளில் நில அதிர்வு

(பதுளை)

லுணுகல, எகிரியா பகுதியில் நேற்று அதிகாலை 4.53 மணியளவில் ஒரு சிறிய நில அதிர்வு பதிவாகியுள்ளதாக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. பல்லேகல மற்றும் ஹக்மன பகுதிகளிலும் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது. (நி-4)

# நீதிமன்ற கட்டமைப்புகள் டிஜிற்றல் மயமாகிறது

(கொழும்பு)

அனைத்து நீதிமன்ற கட்டமைப்பையும் டிஜிற்றல் மயப்படுத்துவதற்கான உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. நீதியமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளது.

நீதிமன்ற கட்டமைப்பில் ஆவணங்களை பராமரித்தல், முகாமைத்துவம், வழக்குகள் குறித்த அறிக்கைகளை வைத்திருத்தல், விநியோகம் உள்ளிட்ட அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளும் இதன் மூலம் டிஜிற்றல் மயப்படுத்தப்படவுள்ளதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் நீதியமைச்சு, நீதிச்சேவைகள் ஆணைக்குழு, தொழில்நுட்ப அமைச்சு என்பன இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படுத்தப்படவுள்ளது. (நி-4)




புற்தரையிலான துடுப்பாட்ட பயிற்சி நிலையம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் லண்டன் வாழ் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் அரியாலை சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

# மூன்றாவது நாளாக ஆயிரத்தை நெருங்கிய தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படுபவர்களது எண்ணிக்கை தொடர்ந்து மூன்றாவது நாளாக ஆயிரத்தை நெருங்கியுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நேற்று முன்தினம் 942 பேருக்கும் கடந்த 9, 10 ஆம் திகதிகளில் 963, 967 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பரந்தன் இரசாயன தொழிற்சாலை மீளவும் இயக்குவதற்கு ஏற்பாடு



(கிளிநொச்சி)

**பரந்தன் இரசாயன தொழிற்சாலையை 2023 ஓகஸ்ட் முதல் மீளவும் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பரந்தன் கெமிக்கல் கம்பனி லிமிட்டெட் மேற்கொண்டுள்ளது.**

இது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முந்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், பரந்தன் கெமிக்கல் கம்பனி லிமிட்டெட் நிறுவனத்தின் பொது முகாமையாளர், ஜீவானந்த விஜேசுந்தர, முகாமைத்துவ பணிப்பாளர் திஸ்ஸ லயனகே, நிபுணத்துவ ஆலோசகர் ராஜரட்ணம் மற்றும் ரஞ்சித் முதலிகே ஆகியோர் கலந்துகொண்டு தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான தமது திட்ட முன்மொழிவை விளக்கினர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன், மேலதிக அரசாங்க அதிபர், திட்டப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் ஆகியோருடன் விவசாயம், மீன்பிடி, நீர்ப்பாசனம், நீர்வழங்கல், நகர அபிவிருத்தி உள்ளிட்ட பல துறைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில், தொழிற்சாலையை மீள இயங்கச் செய்வதற்கான திட்டம் விரிவாக விளக்கப்பட்டது.

திரவ வடிவிலான கோஸ்டிக் சோடாவை பிரதான உற்பத்தியாகக் கொண்டியங்கவிருக்கின்ற இந்தத் தொழிற்சாலை மூலம், மேலதிக விளைபொருள்களாக குளோரின், ஐதரோகுளோரிக் அமிலம், சோடியம் ஹைபோகுளோரைட் என்பனவும் உப உற்பத்திகளாக மேற்கொள்ளப்படும் என்றும் இதன் போது கெமிக்கல் கம்பனி பிரதிநிதிகள் விளக்கினர்.


இவை இதர பல உற்பத்தி முயற்சிகளான, சோப், சுத்திகரிப்பு திரவங்கள், துணிசுத்திகரிப்பு மற்றும் நிறமூட்டல், உணவு பதனிடல் என பல்வேறு செயற்பாடுகளுக்கு அவசியமான மூலப்பொருள்களாக அமையும் என்று குறிப்பிட்ட அவர்கள், இதன்மூலம் மேலும் பல கைத் தொழில்துறைகள் பயனடையும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

2600 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலைச் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கான கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் இதன்படி 2023 ஓகஸ்ட் முதல் இந்தத் தொழிற்சாலையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறினர்.

சுமார் 200 ஏக்கர் அளவிலான பரந்தன் இரசாயன தொழிற்சாலைக்கான காணியில் ஒரு பகுதியிலேயே முதற்கட்ட தொழிற்சாலைப் பணிகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் தொழிற்சாலைச் சுற்றுவட்டாரத்தில் இரசாயன உற்பத்திகளுடன் தொடர்புடைய புதிய கைத்தொழில் முயற்சிகளை தனியார் துறையினர் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும் பரந்தன் கெமிக்கல் கம்பனி பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இது இரசாயன தொழிற்சாலை என்பதால் சூழலுக்கு ஏற்படக்கூடிய மாசுக்கள் தொடர்பாக கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கு பதிலளித்த கம்பனி பிரதிநிதிகள், தொழிற்சாலையின் செயற்பாட்டால் எழக்கூடிய ஒலி மாசு தொழிற்சாலை வட்டாரத்துக்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்றும் இதர திண்ம, திரவ மற்றும் வாயு வடிவ கழிவுகள் மீள் சுழற்சிப் படுத்தல் மூலமோ அன்றி பாதுகாப்பான கழிவகற்றல் பொறிமுறை மூலமோ சுற்றாடல் பாதுகாப்புத்துறையினரின் கண்காணிப்புடன் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தனர். (5-4)

# பாரவூர்தி தடம்புரண்டு விபத்து காயமடைந்தவர் வைத்தியசாலையில்



(குருமன்காடு)

சீமெந்து ஏற்றி வந்த பாரவூர்தி ஒன்று ஏ-9 வீதிப் பனிக்கன்குளம் பகுதியில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்து மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சீமெந்து ஏற்றி வந்த பாரவூர்தி ஒன்று மாங்குளம் பனிக்கன்குளம் ஏ-9 வீதியில் பயணித்த போது கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

பாரவூர்தியில் பயணித்த அதன் நடத்துநர் காயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)

# பெண்கள் குழுவை இணைக்கும் பிரேரணை நிறைவேற்றம்

(முறிகண்டி)

உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட புத்தகத்தில் பிரதான உப குழுக்களில்ஒன்றாக பெண்கள் குழுவையும் பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பான பிரேரணை கரைச்சி பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கரைச்சி பிரதேச சபையின் மாதாந்த அமர்விலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. உப தவிசாளர் சி.தவபாலன் தலைமையில் நடைபெற்ற இவ் அமர்வில் கரைச்சி பிரதேச சபையின் பெண்கள் குழுவினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் பாராட்டப்பட்டதுடன் உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட புத்தகத்தில் பிரதான உப குழுக்களில் ஒன்றாக பெண்கள் குழுவையும் பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

இப்பிரேரணை சபை உறுப்பினர்கள் அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (5-4-100)

# மோ.சைக்கிள்-பட்டா விபத்து

## இருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்றிக்கெய்த குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் பட்டா ரக வாகனம் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓமந்தை, பன்றிக்கெய்த குளம் ஏ-9 பிரதான வீதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

பன்றிக்கெய்தகுளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி இருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது அதே திசையில் வந்த பட்டா ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்த நிலையில் ஓமந்தை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த ஓமந்தை பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)

# நீர் வழங்கல் தடைப்படும்

(நெளுக்குளம்)

வவுனியா நீர் வழங்கல் திட்டத்தின் கீழ்வரும் வவுனியா நகரை அண்டிய பிரதேசங்களில் உள்ள நீரிணைப்பு குழாய்களில் அவசர மேம்பாட்டினை மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் இன்று சனிக்கிழமை நீர் வழங்கல் செயற்பாடானது வவுனியா நகரம், வைரவபுளியங்குளம், இறம்பைக்குளம், குடியிருப்பு, யாழ்ப்பாண வீதி, சூசைப்பிள்ளையார் வீதி, சகாயமாதாபுரம் தேக்கவத்தை, கற்குழி, மதவுவைத்தகுளம், குருமன்காடு, மன்னார் வீதி ஆகிய இடங்களில் முற்பகல் 10 மணிமுதல் இரவு 10 மணி வரை தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர்வழங்கல்வடிகாலமைப்புசபையானது தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளது. (5-4-299)

# இரு வேறு குற்றச்சாட்டில் நால்வர் கைது

(தருமபுரம்)

பளைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பளைப் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் மூவரும் 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பளைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.எம்.குணரட்ன தெரிவித்தார். (5-4-316)

# இராசிபலன்

13.02.2021
மாசி 01, சனிக்கிழமை
துதியை பின்னிரவு 1.47 மணிவரை
சதயம் பிற்பகல் 4.02 மணிவரை
சுபநேரம் 3.34-5.04 மணிவரை
இராகுகாலம் 9.34-11.04 மணிவரை
சந்திராஷ்டமம் பூசம், ஆயிலியம்.

வளவன்


மேஷம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.


மிதுனம்

உங்கள் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்கள் கைகூடும் நாள்.


கடகம்

உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது, உடல் நலனில் அதிக கவனம் தேவை.


சிம்மம்

கடன் பிரச்சினைகளை சமார்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சொந்தபந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.


கன்னி

எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். பகைவர்கள் விலகுவர்.


துலாம்

நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், சுபகாரியச் பேச்சில் நல்ல முடிவுக்கு வரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்.


விருச்சிகம்

வளர்ச்சிப் பாதைக்கு வழிபிறக்கும், இல்லத்தில் இனிய செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு.


தனுசு

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனு கூலமுண்டு.


மகரம்

பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


கும்பம்

உறவினர்களின் சந்திப்பால் திடீர் செலவுகள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

தொழிலில் சிறு மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்

## முஸ்லிம் சட்டங்களை மட்டுமே குறிவைக்க முடியாது

# ரத்ன தேரருக்கு நீதி அமைச்சர் பதில்

(கொழும்பு)

**முஸ்லிம் சட்டங்களை மட்டுமே குறிவைக்க முடியாது என்றும் ஒரு சட்டம் அல்லது கொள்கையை கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டுமானால் இலங்கையில் ஏனைய மதங்கள் பின்பற்றும் சட்டங்களும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**



ஒரு நாடு - ஒரு சட்டம் என்ற கொள்கையில் பயணிக்கும் இலங்கையில், காதி நீதிமன்றங்கள் தொடர்பாக அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அத்துரலிய ரத்ன தேரர் எழுப்பிய கேள்விக்கு நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் கண்டியன் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், யாழ்ப்பாணம் தேசவழமைச் சட்டம், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச்சட்டம் போன்ற பல தனியார் மத சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

அவ்வாறு இருக்கும்போது, ஒரே ஒரு மதச் சட்டத்தை மட்டுமே அகற்ற முடியாது என்று சுட்டிக்காட்டிய நீதி அமைச்சர், கலந்துரையாடல்களுக்குப் பிறகு அதைத் திருத்த முடியும். அல்லது இலங்கையில்உள்ள அனைத்து தனியார் மதச் சட்டங்களும் ஒன்றாக ஒழிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். (நி-4)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# பிரதான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க அரசாங்கம் முயற்சி செய்யவில்லை



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளை கண்டு பிடிக்க அரசாங்கம் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்க அனைத்து ஆவணங்களையும் சட்டமா அதிபரிடம் கையளித்திருப்பதாக பொலிஸிற்கு பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகர சபையில் தெரிவித்திருந்தார்.

ஆனால் சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி, வழக்கு தொடுக்கும் அளவுக்கு முறையான விசாரணை இடம்பெறவில்லை. அதனால் முறையான விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு அந்த ஆவணங்களை அனுப்பி இருக்கின்றார்.

அதனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதாக அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது தெரிவித்திருந்தது. ஒரு வருடமாகியும் அது தொடர்பான விசாரணையைக் கூட முறையாக நடத்த முடியாத அளவுக்கு சென்றிருக்கின்றது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரச தரப்பினர் எமது மதத் தலைவர்களிடம் இதுதொடர்பாக பல்வேறு தகவல்களை தெரிவிக்கின்றபோதும், இந்த விசாரணையை மறைக்க இந்த அரசாங்கமும் முயற்சிக்கின்றதா? என்ற கேள்வி எமக்கு எழுகின்றது.

அதனால் இந்த தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க அரசாங்கத்திடம் எந்த முயற்சியும் இல்லை. குறைந்தபட்சம் இந்தியாவுக்கு தப்பிச்சென்றிருக்கும் சாரா என்ற பெண் தொடர்பாகவேனும் விசாரணை மேற்கொள்ள இவர்கள் முயற்சிப்பதில்லை.

மாறாக தாக்குதல் இடம் பெறாமல் தடுப்பதற்கு தவறினார்கள் என சில அரசியல் தலைவர்களை சிக்கவைக்க மிகவும் தேவையுடன் செயற்படுகின்றதை காணமுடிகின்றது.

எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி, அதன் பின்னணியில் இருந்த வர்கள், அவர்களுக்கு அரசியல் பாதுகாப்பு வழங்கியவர்கள் யார் என்ற விடயங்களை வெளிப்படுத்த வேண்டும்.

இது தொடர்பான முறையான விசாரணை மேற்கொள்ளாமல் அரசாங்கம் மறைக்க முயற்சித்தால், அது பாரிய பிரச்சினைக்கு கொண்டு செல்லும் எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# கொரோனா தொற்றுக்குள்ளான மாணவர்களுக்கு விசேட பரீட்சை நிலையங்கள்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான மாணவர்களின் நலன் கருதி மாவட்ட ரீதியில் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான பரீட்சார்த்திகள் இந்த பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதலாம் என பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் 01 முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)




# சிட்டுக்குருவி கட்டிய செங்கல் வீடு

ஒரு ஊரில் ஒரு காகமும் ஒரு சிட்டுக்குருவியும் நல்ல நண்பர்களாக இருந் தன. அவை இரண்டுக்கும் தங்களுக்கென்று ஒரு வீடு கட்ட வேண்டும் என்று ரொம்ப நாள் ஆசையாம்.

அதற்காக காகம் என்ன செய்தது தெரியுமா? அக்கம் பக்கம் இருக்கிற வீடுகளில் இருக்கிற வைக்கோலை தன் அலகால் கொத்தி திருடிக் கொண்டு வந்துவிடும். ஆனால் சிட்டுக்குருவி அடுத்தவர்கள் பொருளைத் திருடக் கூடாது என்று பொறுமையாக இருந்தது.

கொஞ்ச நாளில் காகத்திடம் நிறைய வைக்கோல் சேர்ந்தது. உடனே காகம் தன்னிடம் இருக்கிற வைக்கோலை வைத்து கூடு ஒன்றைக் கட்டியது.

தனக்கென்று ஒரு வீடு கட்டிக்கொண்ட காகத்தை சிட்டுக்குருவி ஏக்கத்துடன் பார்த்தது. தனக்கு ஒரு கூடு இல்லையே என்கிற வருத்தத்துடன் பறந்து போய்க் கொண்டு இருந்தது.

அப்போது செங்கல் அறுக்கிற ஒருவரின் வீட்டைப் பார்த்தது. அப்படியே கீழே இறங்கி அந்த வீட்டிற்குப் பக்கத்தில் போய் நின்றது சிட்டுக்குருவி.



அந்த வீட்டுக்காரர் சிட்டுக் குருவியைப் பார்த்தாராம். அதனுடைய கண்கள் ஏக்கத்துடன் தான் வைத்திருக்கிற செங்கல்களைப் பார்ப்பதை அந்த வீட்டுக் காரர் கவனித்துவிட்டார்.

உடனே அவர் சிட் டுக் குருவியைப் பார்த்து "நீ ஏன் கவலையாக இருக்கிறாய்? உனக்கு நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா? என்று கேட்டார்.

உடனே சிட்டுக்குருவி, "எனக்கு வீடு கட்ட கொஞ்சம் செங்கல் வேண்டும். கொடுத்து உதவ முடியுமா? என்று கேட்டது.

"ஓ... தாராளமாகத் தருகிறேன். நீ அதற்குப் பதிலா செங்கல் செய்கிற மண்ணைக் கொஞ்சம் மிதித்துத் தருகிறாயா? என்று கேட்டது.

சிட்டுக்குருவியும் தன்னுடைய சின்னக் கால்களால் மண்ணை நன்றாக மிதித்துக் கொடுத்தது.

சந்தோசப்பட்ட அந்த வீட்டுக்காரர் சிட்டுக் குருவிக்காக குட்டிக்குட்டியா ஐம்பது செங்கல் தயார் செய்து கொடுத்தார்.

தன்னுடைய குட்டி அலகால் ஒவ்வொரு செங்கல்லாக தூக்கிக் கொண்டு போய் தனக்கு ஒரு வீடு கட்டியது சிட்டுக்குருவி.

கொஞ்சநாளில் புயல் ஒன்று வர, காக்கா திருடிக் கட்டிய வைக்கோல் வீடு பறந்து போனது. சிட்டுக் குருவி உழைத்துக் கட்டிய செங்கல் வீடு பத்திரமாக இருந்தது. உழைப்பும் அறிவும் இல்லாத காகமாக நாம் இருக்கக் கூடாது.

உழைப்பும் அதே நேரம் அறிவுடனும் சிட்டுக்குருவி மாதிரி இருந்தால் நீங்கள் ஆசைப்பட்டதெல்லாம் உங்களுக்குக் கிடைக்கும்.


# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## பிரமிக்க வைத்த போரஸ்

உங்களுடைய போர் வியூகங்கள், தந்திரங்கள் எல்லாமே என்னை மலைக்க வைத்து விட்டன. ஆகவே, இந்த நாட்டை உங்களுக்கு திருப்பியளிக்கிறேன். நீங்களே ஆள வேண்டும். இதுதான் உங்களுடைய வீரத்திற்கு என்னால் முடிந்த காணிக்கை.

உணர்ச்சிபொங்கப் பேசினார் அலெக்சாண்டர். சொல்லுங்கள் உங்களை நான் எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

அரசனைப்போல. புருஷோத்தமரிடம் இருந்து வீரியம் குறையாமல் வந்துவிழுந்தது பதில்.




நாட்டை அவரிடமே ஒப்படைத்துவிட்டு பரிசுப் பொருட்களைக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார் அலெக்சாண்டர்.

அப்போது அலெக்சாண்டரின் பாசக்குதிரையான பியூசிபேலஸ் இறந்துவிட்ட செய்தி அலெக்சாண்டரை ஒரு கணம் உலுக்கிவிட்டது. கண்கலங்கினார். பின் அழுதார்.

இறுதியாக ஜீலம் நதியின் இருகரைகளிலும் இரண்டு நகரங்களை நிர்மாணம் செய்தார் அலெக்சாண்டர். அவற்றில் ஒன்றுக்கு தன்னுடைய குதிரையின் நினைவாக பியூசிபேலா என்று பெயர் வைத்தார். இன்னொரு நகரின் பெயர் நிஸியா.

நகரை நிர்மாணிப்பது என்றால்? ஒரு பெரிய நிலப்பகுதியைத் தேர்வு செய்து அதில் ஒரு நகரத்திற்குரிய அத்தனை வசதிகளையும் செய்வது. எல்லாமே கிரேக்கக் கட்டடக் கலையைப் பிரதிபலிக்கும் வகையில் இருக்குமாறு பார்த்துக்கொள்வது.

தான் வெற்றிகொள்ளும் நாடுகளில் எல்லாம் இதுபோன்ற நகரங்களை நிர்மாணித்து கிரேக்கர்களின் கட்டடக் கலையைப் பரப்பியதில் அலெக்சாண்டரின் பங்கு அபரிமிதமானது.

(தொடரும்)

# 130 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மோதி கோர விபத்து

## அறுவர் உயிரிழப்பு, 130 பேர் காயம்





(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸில் அமைந்துள்ள நெடுஞ்சாலையொன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 130 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மோதி கோர விபத்தினை ஏற்படுத்தியுள்ளன.

இந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், 130 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


"இது எங்கள் நகரத்தில் ஒரு பெரிய பேரழிவு" என்று நகர தீயணைப்பு செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பகுதியில் காலையில் தொடர்ந்த உறைபனி மற்றும் மழையுடனான இருண்ட வானிலை காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக அம்புலன்ஸ் சேவை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

விபத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளதுடன், விபத்தில் சிக்கிய மேலும் 36 பேர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர்களுள் மூவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தினால் பலர் தமது வாகனங்களுக்குள்ளேயே சிக்கிக் கொண்டுள்ள நிலையில் அவர்களை மீட்கும் நடவடிக்கைகளைத் தீயணைப்பு மற்றும் மீட்புப்படையினர் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## பி.பி.சிக்கு சீனாவில் தடை




(பீஜிங்)

பிபிசி உலக செய்தி தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு சீனா தடை விதித்துள்ளது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு முதல் இந்தத் தடை அமுலுக்கு வருவதாக சீன அரசு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் மற்றும் சிறுபான்மை உய்குர் முஸ்லிம்கள் துன்புறுத்தல்கள் தொடர்பில் பி.பி.சியின் ஒளிபரப்பு குறித்து சீனா விமர்சித்துள்ளதை அடுத்து இந்தத் தடை அமுலாகியுள்ளது.

இந்நிலையில், சீன அரசின் இந்த முடிவு ஏமாற்றம் தருவதாக பி.பி.சி. தெரிவித்துள்ளது.

பிரிட்டன் ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை அமைப்பான ஒப்கொம் (Ofcom) சீனா சர்வதேச தொலைக்காட்சி வலையமைப்பு (CGTN) என்ற சீன அரசு ஒளிபரப்பு நிறுவனத்தின் ஒளிபரப்பு உரிமத்தை மீளப் பெற்றுக்கொண்டதற்குப் பழிவாங்கும் பதில் நடவடிக்கையாக சீனாவின் இந்தத் தடை அமுலாகியுள்ளதாகக் கருதப்படுகிறது. (நி-4)

## உத்தரகாண்ட் பனிச்சரிவு

### சுரங்கத்தில் சிக்கியிருப்போரை மீட்பதில் சிக்கல்



(இந்தியா)

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் சுரங்கத்தில் சிக்கியுள்ளோரை மீட்கும் பணிகளில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தௌலிகங்கா ஆற்றின் நீரோட்டம் திடீரென அதிகரித்ததன் காரணமாக மீட்புப் பணிகளில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், பாதுகாப்பு கருதி குறைந்த எண்ணிக்கையிலான மீட்புப் படை வீரர்களே பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆற்றில் நீரோட்டம் அதிகரிப்பதற்கு முன்பாக சுரங்கத்தில் துளையிட்டு உள்ளே செல்வதற்கான பணிகளில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வந்தனர்.

எனினும் அப்பணிகளுக்குத் தற்காலிகமாக இடையூறு ஏற்பட்டது.

சுரங்கத்துக்குள் சகதி உலர்ந்த நிலையில் உள்ளதால், துளையிடும் பணிகள் தாமதமடைந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## அமெரிக்க ஜனாதிபதிக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் சிறையில்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனுக்குக் கொலை மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டில் நோர்த் கரோலினா மாகாணத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார்.

27 வயதான டேவிட் கைல் ரீவ்ஸ் என்ற இந்த நபர் ஜோ பிடனைக் கொலை செய்யப்போவதாக பலமுறை மிரட்டல் விடுத்தார்.

ஜனவரி 28 ஆம் திகதிக்கும் இம்மாதம் முதலாம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் வெள்ளை மாளிகைக்கு பலமுறை தொலைபேசி அழைப்பெடுத்து இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன், இந்த மிரட்டல் குறித்து தன்னை விசாரித்த இரகசியப் பொலிஸ் அதிகாரிக்கும் அவர் கொலை மிரட்டல் விடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து தேடப்பட்ட இந்த நபர் கடந்த 5 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

தொடர்ந்து நோர்த் கரோலினா மாகாண கூட்டாட்சி நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்ட அவருக்கு மனநலப் பரிசோதனை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் சந்தேக நபர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு அதிகபட்சமாக 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 250,000 டொலர் அபராதமும் விதிக்கப்படலாம் என சட்டத்தரணி தெரிவித்தார். (நி-4)

## பங்களாதேஷில் 8 பேருக்கு மரண தண்டனை

(டாக்கா)

பங்களாதேஷில் புத்தக பதிப்பாளரை கொன்ற வழக்கில் 8 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

பங்களாதேஷில் 2015 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் பைசல் அபெதின் தீபன் என்ற புத்தக பதிப்பாளர், டாக்கா பல்கலைக்கழகம் அருகே அமைந்துள்ள சந்தையில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். இதேநாளில் நடந்த மற்றொரு கொலை முயற்சியில் இன்னொரு பதிப்பாளரான அகமது ரஷித் துதுல் என்பவர் தப்பித்தார்.

இவர்கள் இருவரும் பங்களாதேஷ் அமெரிக்க எழுத்தாளர் அவிஜித்ராய் புத்தகங்களை பதிப்பித்து வந்தவர்கள். பைசல் அபெதின் தீபன் கொலை வழக்கில் 8 பேர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. அவர்களில் 6 பேர் கைது செய்யப்பட்டனர். 2 பேர் இன்னும் தலைமறைவாக உள்ளனர். இவர்கள் மீதான வழக்கு விசாரணை, டாக்கா பயங்கரவாத தடுப்பு நீதிமன்றில் நடந்து வந்தது.

விசாரணை முடிவில், 8 பேர் மீதான குற்றச்சாட்டும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருதிய நீதிபதி முஜிபுர் ரகுமான் அனைவருக்கும் மரண தண்டனை விதித்து கடந்த புதன்கிழமை தீர்ப்பு அளித்தார். தலைமறைவாக உள்ள 2 பேரையும் கைது செய்ய பிடியாணை பிறப்பித்தும் உத்தரவிட்டார். இந்த வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரும் தடை செய்யப்பட்ட அன்சார் அல் இஸ்லாம் போராளி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வைக்கிங்ஸை வீழ்த்தி அரியாலை கில்லாடிகள் முதல் வெற்றி





ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக் கிண்ணம் 2021 தொடரின் 9 ஆவது தகுதிகாண் போட்டி கடந்த 6 ஆம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் அரியாலை கில்லாடிகள் அணி, சுழிபுரம் வைக்கிங்ஸ் அணியை 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று தங்கள் முதல் வெற்றியை பதிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் அணி 19 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியில் மதுஸன் 55, சேந்திரன்-12 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் அரியாலை அணியின் பிரபுவன்-1, வியஸ்காந்-1, அஜித்-1 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

122 வெற்றி இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அரியாலை அணி 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியில் எல்.ஆகீஸன் 69, வியஸ்காந்-22, கானா மிர்தன் -10 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் சுழிபுரம் அணியின் சிறிகுகன், தினோஜன், அலன்ராஜ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இப்போட்டியில் சிறந்த வீரராக எல்.ஆகீஸன் தெரிவு செய்யப்பட்டார்.(4)

# வடதாரகையை வீழ்த்தியது யுனிபைட்



வவுனியா துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்படும் பிரிவு மூன்றுக்கான கடினப்பந்து போட்டியின் இறுதி நிகழ்வு வவுனியா நகரசபை மைதானத்தில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது.

இப்போட்டியில் இறுதிப் போட்டிக்கு யுனிஸ்பட் மற்றும் வடதாரகை விளையாட்டுக் கழகங்கள் தெரிவாகியிருந்தன.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யுனிபைட் அணி ஐம்பது ஓவர் நிறைவில் 09 விக்கெட்களை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.


231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வடதாரகை விளையாட்டுக்கழகம் 42.4 ஓவர்களை எதிர் கொண்டு தனது சகல விக்கெட்டுகளையும் இழந்து 198 ஓட்டங்களை பெற்று தோல்வியடைந்தது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக யுனிபைட் விளையாட்டுக்கழகம் சார்பாக செ.ருசாந்தனும், தொடர் ஆட்ட நாயகனாக வடதாரகை விளையாட்டுக்கழகம் சார்பாக சத்தியமூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டனர். (4-299)




### டினுசாந்

வீட்ல பச்சரிசி வாங்கிட்டு வர சொன்னாங்க.. நானும் காலையில இருந்து ஏழு எட்டு கடை ஏறி இறங்கிட்டேன்.. எல்லா கடையிலையும் அரிசி வெள்ளையாவே இருக்கு.



### தாரணி



பெட்ரோல் விலை உயர்வால் புல்லட் பாண்டி தனது பைக்கிற்கு பெட்ரோல் போட முடியாமல்



சைக்கிளில் செல்லும் அவல நிலை உருவாகி உள்ளது

### துர்க்கா

ஒரு வேளை மெடிக்கல் காலேஜ் ஸ்டூடனட் வண்டியா இருக்குமோ?!!!



### நிருத்திகா

டிபன் பாக்ஸ்ல சாப்பாட்டை வச்சி குடுப்பாங்கனு பார்த்தா



இங்க என்ன சூனியம் வச்சி விட்டுருக்கு!

### நிசாந்தன்




### சுபராஜ்

டாக்டர்: இது கொஞ்சம் சிக்கலான கேஸ்..
நோயாளி: எதனால அப்பிடி சொல்றீங்க டாக்டர்
டாக்டர்: நான் பரீட்சையில பெயிலான சப்ஜெக்ட்லயிருந்து உங்களுக்கு நோய்வந்திருக்கு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்ட ஐம்பது பேருக்கு கொரோனாத் தொற்று



(கொழும்பு)

கொழும்பில் இடம் பெற்ற சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்ட 50 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவில் பாதுகாப்பு திணைக்கள குழுவில் 50 பேருக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


அத்துடன் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்ட கதிர்காமம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்படவில்லை என்பதுடன், நிகழ்வின் பின்னர் கதிர்காமத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஜனாஸாக்களின் அடக்கம் குறித்து இன்னும் முடிவில்லை என்கிறார் ஹேமந்த

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் காரணமாக மரணிப் போரின் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பிலான ஆலோசனைகள் சுகாதார அமைச்சின் மூலம் உரிய வழிமுறைகள் கிடைக்கப்பெற்ற பின்னர், அதற்கமைய செயற்பட முடியும் என சுகாதார அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவிக்கையில், "பாராளுமன்றில் பிரதமர் விடுத்த கருத்து தொடர்பாக மாத்திரமே தற்போது தகவல் கிடைத்துள்ளன.

அவ்வாறான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்போது சுகாதார அமைச்சின் ஊடாக உரிய முறைமைகளுடனான வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

இதற்கமையவே மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# துப்பாக்கி அனுமதிப்பத்திரம் இனி விவசாயிகளுக்கும் வழங்கப்படும்

(கொழும்பு)

ஒரு ஏக்கருக்கும் அதிகளவில் காணியை கொண்டுள்ள விவசாயிகளுக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் கருத்துரைத்த விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே இதனை குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடப்பட்ட பின்னரே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வனங்கள் அழிக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்படுவதானால் வனவிலங்குகளுக்கு உணவில்லாத பிரச்சினை ஏற்படுகின்றது.

எனவே, வனவிலங்குகள் உணவு தேடி விவசாய நிலங்களுக்குள் பிரவேசிக்கின்றன.

இதன் காரணமாக விவசாயத்துறைக்கு 25% மான நட்டம் ஏற்படுகின்றது.

அவற்றிலும் அதிகமான பாதிப்பு காட்டு யானைகளின் பிரவேசம் காரணமாகவே இடம் பெறுகிறது.

எனவே ஒரு ஏக்கருக்கு அதிகளவில் காணியைக் கொண்டுள்ள விவசாயிகளுக்கு துப்பாக்கி வைத்திருப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என மகிந்தானந்தா தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பெண் ஒரு விஞ்ஞானப் பார்வை

அறிவில் சிறந்தவர்கள் ஆண்களா? பெண்களா? இப்படி ஒரு கேள்வியைக் கேட்டேன் என் நண்பன் ஒருவரைப் பார்த்து.

அவர் தலையை மெதுவாக சொறிந்து கொண்டு அதிலே என்ன சேர் சந்தேகம் அவர்கள் தான் என்றார்.

அனுபவ அடிப்படையிலே இவர் இப்படிச் சொல்கிறார். அறிவியல் அடிப்படையிலே பார்க்கிறவர்களும் இப்படித்தான் சொல்வார்கள்.

இயற்கையின் நோக்கம் இனப்பெருக்கும். இதிலே பெண்களின் பங்கு அதிகம்.

அதனால் இயற்கையே பெண்களுக்கு பல சலுகைகளை கொடுத்திருக்கிறது. சக்தியையும் கொடுத்திருக்கிறது.

வெளிநாட்டில் எல்லாம் இதைப் பற்றி நிறைய ஆராய்ச்சி எல்லாம் செய்து பாத்திருக்கிறார்கள்.

ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் முன்னதாகவே பேச ஆரம்பித்து விடுமாம். அதிக எண்ணிக்கையிலே வார்த்தைகளை கற்றுக் கொள்கிறது.

பலவிதமான வாக்கிய அமைப்புக்களை அமைத்துப் பேசிக் கொள்வது இதையெல்லாம் சீக்கிரமாக செய்வது பெண் குழந்தைகள் தானாம்.

சம வயதுள்ள ஆண் குழந்தைகள்–பெண் குழந்தைகள் இவர்களை வைத்து சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள்.

ஒரே கேள்வியை பலவிதமாக கேட்பது. ஒரே விடயத்தை வேற வேற கோணங்களிலே இருந்து விளக்குகிறது.

தவறு இல்லாமல் பேசுவது, வேகமாகப் படிக்கிறது, எழுதுவது, புரிந்து கொள்வது இப்படி எத்தனையே சோதனைகள்.

இதில் எல்லாம் ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் ஒன்றரை மடங்கு அதிக திறமை உள்ளவங்களாக இருக்கிறார்களாம்.

இன்னுமொரு மொழியை கற்றுக் கொள்வது, பேசுவது, எழுதுவது இதுவும் பெண்குழந்தைகளுக்குத்தான் சுலபமாக வருகிறது.

இரண்டு மொழியை மாற்றி மாற்றிப் பேசுவது,மொழி பெயர்ப்பது இதில் சுட பெண்களுக்குத்தான் அதிக திறமையாம்.

சரி இதை விடுங்கள்.

புள்ளி வைத்து கோலம் போடுவதில் இருந்து கைக்கடிகாரங்களிலும் கணனிகளிலும் நுண்ணிய பாகங்களைப் பொருத்துவது வரை பெண்கள் திறமையாகச் செய்கிறார்களாம். நுட்பம்–துல்லியம் விரைவு சிறுகை இயக்கங்களோடு செய்ய வேண்டிய மென்மையான பணிகள் இதுக்குத் தேவை. கவனக் குவியம், பொறுமை இது பெண்களிடம் தான் இருக்கிறது.

அமெரிக்காவில் இன்னுமொரு சோதனைக்கூடம் செய்து பார்த்திருக்கிறார்கள். பெண்களின் மூக்கின் மோப்ப உணர்வு பற்றி பார்த்திருக்கிறார்கள்.

அதிக எண்ணிக்கையிலேயே வாசனைகளை பிரித்து கண்டு பிடித்து விடுவார்களாம்.

அந்த அளவுக்கு ஆண்களுக்கு முடியவில்லை. சரி காது எப்படி?

செவிப் புலன் உணர்வும் பெண்களுக்குத்தான் அதிகமாம்.

ஒரு கும்பலில் பலவிதமான சத்தம். அதுக்கு இடையிலே குரலின் தொனி ஏற்றம், இறக்கம் இதை வைத்தே பேசுகின்ற ஆளைக் கண்டு பிடித்து விடுவார்களாம்.

ஒரு கூட்டத்திலே தன்னுடைய கணவர், பிள்ளைகள் இவர்களை சீக்கிரமாகவே கண்டு பிடித்து விடுவார்களாம்.

இன்னுமொரு விடயம் ஒரு பொருளைப் பார்த்ததும் அது என்னவென்று அடையாளம் கண்டு பிடிப்பது. அதை மனதிலே பதிய வைத்துக் கொள்வது பின்பு இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அந்தப் பொருள் எங்கே இருந்ததென்று ஞாபகப் படுத்திக் கொள்வது. இதில் எல்லாம் பெண்கள் தான் முன்னிலையில் இருக்கிறார்களாம்.

ஒரு சராசரி சூழ்நிலையிலே ஆண்களை விட அதிகமான எண்ணிக்கையில் புன்னகை புரிவது பெண்கள் தான்.

அதிகமான தோழமை உணர்வோடு பேசுவதும் அவர்கள்தான். இரண்டு பெண்கள் பேசிக்கொண்டு இருப்பதையும் பாருங்கள். அதேமாதிரி இரண்டு ஆண்கள் பேசிக்கொண்டு இருப்பதையும் பாருங்கள். ஆண்கள் ஒரு அடி தள்ளி நின்றே பேசிக்கொண்டு இருப்பார்கள்.

மருத்துவர்களை எடுத்துக்கொள்ளுங்கள். சிரித்த முகத்தோடு நோயாளர்களிடம் பரிவோடு பேசுவதில் பெண் வைத்தியர்கள் தான் அதிகம்.

இதுவரைக்கும் சொன்னதெல்லாம் ஏதோ பெண்களுக்கு ஐஸ் வைக்கிறான் என்று யாரும் நினைத்து விட வேண்டாம். இது எல்லாம் விஞ்ஞான ரீதியான விடயங்கள். ஆராய்சியாளர்கள் சொல்லியிருக்கிற செய்திகள்.

அனுபவத்திலேயே நாம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். நம்ம வீடுகளில் பெண் பிள்ளைகளை புரிந்து கொள்ளும் அளவுக்கு ஆண்பிள்ளைகள் புத்திசாலித்தனமாக எதையும் புரிந்து கொள்வதில்லையே.

ஒரு ஆண் அவனுடைய அப்பா, அம்மா திருமண அல்பத்தை புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த போது அம்மாவிடம் கேட்டான்...

அம்மா யார் இது இந்தப் படத்திலே அழகான மீசை வைத்து சிரித்துக் கொண்டு இருப்பது என்று. அவர் தான் உன்னுடைய அப்பா என்றார் அம்மா.

அப்படியென்றால் இப்ப நம்ம வீட்டில நரைச்ச தலையோட அழுத மூஞ்சயோட இருக்கிறாரே ஒருத்தர் அவர் யார்? அப்படி என்றானாம் பையன்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

04

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



எனவே, தேர்தல் நாளன்று பொதுத் தேர்தலை மாநில அரசுகளே நடத்துகின்றன. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்குப் பின்வரும் முதல் செவ்வாய்க்கிழமையில் நடைபெறும். இது நிலையானது. இதைவிட தேர்தல் சம்பந்தமான மற்றைய எல்லா நடபடிகளும் மாநில அரசுகளே செயற்படுத்துகின்றன.

அதாவது அமெரிக்க அரசியலமைப்பின் படி கூட்டாட்சி அரசாங்கம் தேர்தலுக்கான பரிமாணங்களைத் தீர்மானிக்கும் அதேவேளையில், மாநில அரசுகளின் சட்டம் அமெரிக்காவில் நடைபெறும் தேர்தலின் பெரும்பாலான அம்சங்களை ஒழுங்குபடுத்துகிறது. இதில் முதல் நிலை வாக்கெடுப்பு (Primary), வாக்காளர்களின் தகுதி, வாக்கெடுப்பு முறைகள், வாக்குச்சீட்டு கட்டமைப்பு, வாக்களிப்பு மற்றும் வாக்கெண்ணல் நேரம், ஒவ்வொரு மாநிலத்தின் தேர்தல் கல்லூரி, அத்துடன் மாநில மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துதல் போன்றவை உள்ளடங்கும். கூட்டாட்சி (ஜனாதிபதித் தேர்தல்), மாநில மற்றும் உள்ளூர் அனைத்துத் தேர்தல்களும் மாநிலங்களால் அவற்றின் சட்டத்துக்கு அமைய நிர்வகிக்கப்படுகின்றன.

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது மாநில அரசுகளே. தேர்தல்கள் சம்பந்தமாகக் கூட்டாட்சித் தேர்தல் ஆணைக்குழு ஒன்றுள்ளது. இது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில்லை. கூட்டாட்சித் தேர்தல் ஆணைக்குழுவின் கடமை தேர்தல் பிரசார நிதிச்சட்டங்களின் நிர்வாகத்துடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.**

### அமெரிக்காவில் அரசியல் கட்சிகள் எவ்வாறு பதியப்படுகின்றன?

அமெரிக்காவில் 1789 இல் இருந்து இற்றை வ்ரையில் 200 இற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் இயங்கின, இயங்கிக் கொண்டிருக்கின்றன. பல கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலத்தின் பின் இல்லாமலும் போய்விட்டன. இவ்வாறு இல்லாமல் போன கட்சிகள் 100 இற்கு மேல் இருக்கும். தற்போது அமெரிக்காவில் 60 இற்கு மேற்பட்ட கட்சிகள் இருக்கின்றன.

அமெரிக்காவில் அரசியல் கட்சிகள் இலங்கையைப் போன்று நாடளாவிய ரீதியில் ஒரு அலுவலகத்தில் மட்டும் பதிவு செய்தால் போதும் என்ற முறையில்லை. இலங்கையில் கட்சிகள் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் பதியப்படுகின்றன. அவ்வாறு பதியப்பட்டால் நாடு பூராகவும் அக்கட்சியின் பெயரில் தேர்தல்களில் போட்டியிட முடியும். அமெரிக்காவில் அப்படியில்லை.

ஒவ்வொரு கட்சியும் தம்மை மாநில மட்டத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும். உதாரணமாக குடியரசுக் கட்சியை எடுப்போமானால் அது தனித்தனியாக ஒவ்வொரு மாநிலத்திலும் தன்னைப் பதிவு செய்துகொண்டுள்ளது. 50 மாநிலங்களில்49 மாநிலங்களில் மட்டுமே கட்சிகள் பதியப்படுகின்றன.

வோஷிங்டன் மாநிலத்தில் கட்சிகள் பதியப்படுவதில்லை. மாநிலங்களில் அதிகாரபூர்வமாகப் பதியப்பட்ட கட்சிகளின் பெயர்களும் அவை எத்தனை மாநிலங்களில் பதியப்பட்டுள்ளன என்ற விபரமும் அடைப்புக் குறிக்குள்ளும் காட்டப்பட்டுள்ளது. அவையாவன- ஜனநாயகக் கட்சி (49), குடியரசுக் கட்சி (49), லிபர்டேரியன்கட்சி (34), பசுமைக்கட்சி (22), அரசியலமைப்புக் கட்சி (15), கூட்டணிக் கட்சி (5), உழைக்கும் குடும்பங்கள் கட்சி (5) , சீர்திருத்தக் கட்சி (2), இயற்கை சட்டக்கட்சி (2), சோசலிசம் மற்றும் விடுதலைக்கான கட்சி (2), தொழிலாள வர்க்கம் (2) ஆகும். இவ்வாறு 16 பிற அரசியல் கட்சிகள் / சுயேட்சைகள் தங்களைப் பதிவு செய்துள்ளன. அவை தம்மை ஒரு மாநிலத்தில் மட்டுமே பதிவு செய்துள்ளன.

**அமெரிக்காவில் 1789இல் இருந்து இற்றை வரையில் 200 இற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் இயங்கின, பல இயங்கிக் கொண்டிருக்கின்றன. பல கட் சிகள் ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலத்தின் பின் இல்லாமலும் போய்விட்டன. இவ்வாறு இல்லாமல் போன கட்சிகள் 100 இற்கு மேல் இருக்கும்.**

**அமெரிக்காவில் ஒவ்வொரு கட்சியும் தம்மை மாநில மட்டத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். 50 மாநிலங்களில் 49 மாநிலங்களில் மட்டுமே கட்சிகள் பதியப்படுகின்றன. வோஷிங்டன் மாநிலத்தில் கட்சிகள் பதியப்படுவதில்லை. தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சிகள் பதியப்பட வேண்டிய அவசியமில்லை.**

### ஒரு கட்சியின் ஜனாதிபதி, துணை ஜனாதிபதி வேட்பாளர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகிறார்கள்?

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் முதல் கட்டம் தேர்தலில் போட்டியிடப் போகும் வேட்பாளர்களை தெரிவு செய்வதாகும். கட்சியின் சார்பில், யார் நிற்பது என்பதை தீர்மானிக்க, முதலில் கட்சிக்குள்ளேயே தேர்தல் நடக்கும். இதை முதல் நிலை வாக்கெடுப்பு (Primary) என்கிறார்கள். இந்தபூர்வாங்க (முதல் கட்டத்) தேர்தல்களும் பொறிபறக்கும் விவாதங்களும் ஜனாதிபதித் தேர்தலுக்கான அதிகாரபூர்வ வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதில் அங்கிருக்கும் முக்கிய கட்சிகளின் அத்தியாவசிய நடைமுறைகளாக உள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் கட்சியின் உறுப்பினர்கள் கூடி வாக்களித்த தன் அடிப்படையில், எந்த வேட்பாளருக்கு பெரும்பான்மை ஆதரவு இருக்கிறதோ, அவரே அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக, அக் கட்சியின் தேசிய மகாநாட்டில், அறிவிக்கப்படுவார். அதன் பின் அம்மகாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டவர், தன்னுடன் துணை ஜனாதிபதி பதவிக்கு யார் வேட்பாளராக வரவேண்டும் என்பதை தீர்மானித்து அறிவிப்பார்.

இம்முறையிலே ஜனாதிபதி, துணை ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் நடைபெறுகின்றது. இந்த நடைமுறை அமெரிக்க அரசியல் அமைப்பில் இல்லை. ஆனாலும் இவ்வாறான செயற்பாடே நடைமுறையில் உள்ளது. (அவுஸ்திரேலியா மற்றும் இஸ்ரேல் நாடுகளிலும் இது போல, வேட்பாளர்களை முன்கூட்டியே தேர்வு செய்யும் நடைமுறைகள் உள்ளன).

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் முதல் கட்டம் தேர்தலில் போட்டியிடப் போகும் வேட்பாளர்களை தெரிவு செய்வதாகும். கட்சியின் சார்பில், யார் நிற்பது என்பதை தீர்மானிக்க, முதலில் கட்சிக்குள்ளேயே தேர்தல் நடக்கும். இதை முதல் நிலைவாக்கெடுப்பு (Primary) என்கிறார்கள்.**

### அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கட்சிகள் எவ்வாறு போட்டியிடுகின்றன?

இரண்டு பிரதான கட்சிகளான ஜனநாயகக்கட்சி மற்றும் குடியரசுக் கட்சி ஆகியவை தவிர்ந்த ஏனைய கட்சிகள் எல்லாம் சகல மாநிலங்களிலும் தம்மைப் பதிவுசெய்து கொள்ளாவிட்டாலும் அவையும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டன.

தேர்தலில் போட்டியிடுவதற்கு பதிவு செய்வது முக்கியமல்ல. அதாவது இலங்கையில் சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடுவது போன்று, அவ்வாறு 2020 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளின் விபரமும் மாநிலமல்லாத வோஷிங்டன், டி.சி.உட்பட அவை எத்தனை மாநிலங்களில் போட்டியிட்டன என்ற விபரம் அடைப்புக்குறிக்குள்ளும் காட்டப்ட்டுள்ளது.

ஜனநாயகக்கட்சி (51), குடியரசுக் கட்சி (51), லிபர்டேரியன்கட்சி (51), பசுமைக்கட்சி (46), அரசியலமைப்புக் கட்சி (30), சோசலிசம் மற்றும் விடுதலைக்கான கட்சி (33), கூட்டணிக் கட்சி (25) ஆகும். இவற்றைவிட பல சிறு சிறுகட்சிகள் ஒரு சில மாநிலங்களில் போட்டியிட்டன.

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி மற்றும் லிபர்டேரியன் கட்சி மாநிலமல்லாத வோஷிங்டன், டி.சி உட்பட அனைத்து 50 மாநிலங்களிலும் போட்டியிட்டன. பல சிறு சிறுகட்சிகள் ஒரு சில மாநிலங்களில் மட்டும் போட்டியிட்டன.**

ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுக்காக போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை வாக்குச்சீட்டில் அச்சிடுவதற்கு அவ்வேட்பாளர்களின் கட்சிகள் சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அதுபற்றி இப்போது பார்ப்போம்.

**ஒரு ஜனாதிபதித் தேர்தல் வாக்குச் சீட்டை எடுப்போமானால் வாக்குச் சீட்டில் எல்லா ஜனாதிபதி வேட்பாளர்களினது பெயர்களும் இருப்பதில்லை. ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுக்காக போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை வாக்குச்சீட்டில் அச்சிடுவதற்கு அவ்வேட்பாளர்களின் கட்சிகள் சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.**

### வாக்குச் சீட்டில் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளர்கள் பெயர்கள் இடம்பெறல்

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியால் பரிந்துரைக்கப்பட்ட ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளர்களின் பெயர்கள் ஜனாதிபதித் தேர்தல் வாக்குச்சீட்டில் அச்சடிக்கப்படும். அமெரிக்காவில் வாக்குச்சீட்டுகளின் வடிவமைப்பு மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபடுகிறது. ஒரு ஜனாதிபதித் தேர்தல் வாக்குச் சீட்டை எடுப்போமானால் வாக்குச் சீட்டில் எல்லா ஜனாதிபதி வேட்பாளர்களினது பெயர்களும் இருப்பதில்லை.

(தொடரும்...)

# இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும்

## சுமந்திரன் வலியுறுத்து

**(கொழும்பு)**

**"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளால் கொண்டு வரப்படும் புதிய பிரேரணைக்கு இந்தியா கட்டாயம் ஆதரவு வழங்க வேண்டும்" இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

"இம்முறை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணையைக் கொண்டு வரவுள்ள நாடுகளுடன் நாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில் இந்தியாவுடனும் தொடர்ந்து பேசி வருகின்றோம்.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளால் கொண்டுவரப்படும் புதிய பிரேரணைக்கு இந்தியா கட்டாயம்ஆதரவு வழங்கவேண்டும்.

இந்தியாவில் ஏராளமான தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களின் உணர்வுகளையும் இந்திய மத்திய அரசு கவனத்தில் கொண்டு செயற்படும் என்றே நாம் நம்புகின்றோம்" என அவர் தெரிவித்தார். (நி-4)



# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி

## பேரின்பம் தரும் 'ஓம்' மந்திரம்

*(தொடர்ச்சி)*

*பகவத் கீதையின் 8 ஆவது அத்தியாயத்தில் 13 ஆவது சுலோகத்தில் "எவன் ஒருவன் பரம்பொருளாகிய ஓம் எனும் ஓரெழுத்துச் சொல்லை உச்சரித்துக் கொண்டும் என்னை மனதில் கொண்டும் இப்பூத உடலை விட்டுப் புறப்படுகிறானோ அவன் எல்லாவற்றுக்கும் மேலான கதியை அடைகிறான்" என்று கூறியுள்ளார்.*

*அதனால்தான் நம்முன்னோர்கள் "ஓம் நமோ நாராயண நம" என்று மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார்கள். அது போல ஓம் நமசிவாய, ஓம் விநாயகா, ஓம் முருகா, ஓம் சக்தி, ஓம் சாய்ராம் என்றெல்லாம் சொல்லி அவரவர் இஷ்ட தெய்வத்தை அழைத்து வணங்குகிறார்கள்.*

*இப்படி கடவுள்களின் பெயர்களுக்கு முன்பு ஓம் சேர்த்து சொல்வதன் காரணமாக அந்தந்த தெய்வங்களிடம் நாம் "என்னையும் உன்னோடு சேர்த்துக் கொள்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.*

*காலம் வரும்போது இந்த மந்திரம் சொன்னதற்கான பலன் நமக்கு உறுதியாகக் கிடைக்கும் என்கிறார்கள்.*

*ஆனால் அதற்கு நாம் ஓம் மந்திரத்தை மனத்தூய்மையுடனும் சரியான முறையிலும் சொல்ல வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும்.*

*ஓம் எனும் மந்திரத்தை ஒருபோதும் சத்தம் போட்டு வெளியில் பிறருக்கு கேட்கும் வகையில் உச்சரிக்கக் கூடாது. மனதுக்குள் ஓம்...ஓம்...ஓம்... என்றே ஜெபிக்க வேண்டும்.*

*ஆலய வழிபாடு செய்து முடித்ததும் சந்நிதி பிரகாரங்களில் அமைதியான ஒரு இடத்தில் உட்கார்ந்து மனத்துக்குள் ஓம், ஓம், ஓம் என்று உச்சரித்தால் உங்கள் மனம் இறைவனோடு முழுமையாக ஒன்றிவிடும். அதன் காரணமாக ஆலய வழிபாடு செய்த பலன் இரட்டிப்பாகக் கிடைக்கும்.*

*ஓம் மந்திரத்தை எப்படி உச்சரிப்பது என்பதற்கு பதஞ்சலி முனிவர் ஒரு வரையறை செய்துள்ளார். அதாவது ஓம் என்று சொல்லும்போது ஓ-வின் உச்சரிப்புக் குறைவாகவும் ம்-என்பதன் உச்சரிப்பு நீண்டதாகவும் இருக்க வேண்டும் என்கிறார்.*

*ஓ என்று சொல்லத் தொடங்கும்போது உங்களுக்குப் பிடித்த இஷ்ட தெய்வத்தை நினைத்துக் கொள்ள வேண்டும். அப்போது மூச்சுக்காற்றை நன்கு உள் இழுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.*

*பிறகு மூச்சுக்காற்றை மெல்ல வெளியில் விட்டபடி "ம்" என்பதை உச்சரிக்க வேண்டும். அப்போது நீங்கள் நினைத்த இஷ்ட தெய்வத்தை மனதுக்குள் நன்கு நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த முறையில் தினமும் ஓம் மந்திரத்தைச் சொல்லி வந்தால் நாளடைவில் உங்கள் இஷ்ட தெய்வம் உங்கள் ஆழ் மனதில் நிலையாக இடம்பெற்று விடும்.*

*உங்கள் மனம் வேறு சிந்தனைகளில் சிக்கி அலைபாய நேரிட்டாலும் ஓம் உச்சரிப்பதால் இஷ்ட தெய்வத்தை ஓரிரு விநாடிகளில் மனதில் ஒரு முகப்படுத்தும் ஆற்றலைப் பெற முடியும்.*

(தொடரும்...)

# செய்தித்துளிகள்


## பி.சி.ஆர்.ஆய்வக ஊழியருக்கு கொரோனா

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பி.சி.ஆர்.மருத்துவ ஆய்வகத்தில் மாதிரி சோதனை ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார். மேலும் அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஏனைய 6 ஊழியர்கள் கம்பஹா மாவட்டத்தில் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதனால் பி.சி.ஆர்.சோதனை முடிவுகளைப் பெற சிறிது அழுத்தம் ஏற்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகளின் மாவட்ட பணிப்பாளர் டாக்டர் நளின் அரியரத்ன தெரிவித்தார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள மருத்துவ ஆய்வகத்தில் ஒரு நாளைக்கு சுமார் 5,000 பி.சி.ஆர். அறிக்கைகளை வெளியிடும் திறன் உள்ளது.(நி-4)

## பிரபல நடிகர் ஜயலால் ரோஹண காலமானார்



(கொழும்பு)

பிரபல நடிகர் ஜயலால் ரோஹண தனது 55 ஆவது வயதில் காலமானார்.

ராகம வைத்தியசாலையில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

## மாணவி சடலமாக மீட்பு

(ஹற்றன்)

பாடசாலை மாணவியொருவரின் சடலம் நேற்று மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டவர் தலவாக்கலை, ரத்தினகல பகுதியைச் சேர்ந்த 16 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 250 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 600 | 600 |
| தக்காளி | 200 | 200 | 230 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 160 | 220 | 200 | 250 |
| பூசணி | 120 | 140 | 140 | 160 |
| புடோல் | 180 | 150 | 160 | 140 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 150 | 120 |
| பாகற்காய் | 180 | 160 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 180 | 250 | 240 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 130 | 150 |
| பயற்றங்காய் | 140 | 200 | 350 | 240 |
| லீக்ஸ் | 100 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 130 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 160 | 200 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 240 | 200 | 270 | 250 |
| முள்ளங்கி | 140 | 100 | 180 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 50 | 30 |
| ஈரப்பலா | 150 | 100 | -- | 100 |

# பொதுக்காணியை அபகரிப்பை எதிர்த்து சோரன் கிராம மக்கள் போராட்டம்



(கண்டாவளை)

**கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி சோரன்பற்று கிராமத்தில் பொது தேவைக்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் காணியினை தனிநபர் ஆக்கிரமித்து வருவதற்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் சோரன்பற்று கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கரந்தாய் பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன

இதில் பாற்பண்ணை மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என பல்வேறு தேவைகளுக்கும் காணிகள் ஒதுக்கப்பட்டதாகவும் இதில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியினை தனிநபர் ஒருவர் அடாத்தாக பிடித்து அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்து வரும் நிலையில்,

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஏ-9 வீதியின் கரந்தாய் பகுதியில் நடைபெற்றது.

இதில் குறித்த காணியை பெற்றுத்தருமாறு கோரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுசாங் கனிடம் குறித்த கோரிக்கை அடங்கிய மகஜர் மக்களால் கையளிக்கப்பட்டது.

(5-4-315)



யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன் '2020 நேர்மைக்கான மகுடம்' விருதினை பெற்றமையினை கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தின் தலைவர் வினோத் அண்மையில் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்.

# பொதுமக்களுக்கு வரும் வாரம் வாரத்தில் தடுப்பூசிகள் வழங்கப்படும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் எதிர்வருகின்ற வாரம் முதல் கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசி வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் தலைமையில் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வுறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசினால் அமுல்படுத்தப்படுகின்ற "கொரோனா" தடுப்பூசி எதிர்வருகின்ற வாரம் முதல் மக்களுக்கு செலுத்தப்பட உள்ளது.

இதில் 30 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்களுக்கும் அடுத்த வாரமே கொரோனாத் தடுப்பூசி வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டது.



இந்த மாதம் 694 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(5-4-285)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வரணி மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு "சிவனியார்களை சிந்திப்போம் வணக்குவோம்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

இச் சொற்பொழிவுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன் கிழமை முதல் தொடக்கம் 27 ஆம் திகதி சனிக்கிழமை வரை மாலை 6.30 மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளன. (5-4)

# விபத்து;ஒருவர் காயம்



(கண்டாவளை)

கிளிநொச்சி ஏ-9 வீதியின் பரந்தன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.


பரந்தன் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் கப்ரக வாகனம் ஒன்றுடன் மோதி யாழில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(5-4-315)





உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் திறன் வகுப் பறைத் திறப்பு விழா நேற்று வெள்ளிக் கிழமை அதிபர் திருமதி வாசுகி பஞ்சாட்சரம் தலைமை யில் நடைபெற்றது. இவ்விழா வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் சி.சிவன்சுதன் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு திறன் வகுப்பறையை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

(படங்கள்:-ரவிசாந்)

வாழ்வின் ஒவ்வொரு செயலையும் இறைவனுக்கே அர்ப்பணியுங்கள். அதில் அகங்காரத்தைக் கலக்காதீர்கள். கடவுள் கொடுத்த வேலையாகவே இதைச் செய்தல் நல்லது. இதுவே தெய்வீக வாழ்வின் அடிப்படை. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை களமிறங்க வேண்டும்

ஈழத் தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை – பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் முறைமைகளை ஆய்வு செய்வதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைக்குப் பெரும் பங்குண்டு.

அதிலும் குறிப்பாக தொல்லியல் சார்ந்த ஆய்வுகளில் நம் பேராசிரியர்கள் ஆற்றிய பங்கும் பணியும் காத்திரமானவை.

அண்மைக்காலங்களில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் வன்னி மண்ணில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் பழமைவாய்ந்த சிவாலயங்களும் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த விக்கிரகங்களும் கண்டறியப்பட்டுள்ளதுடன் தொன்மை மிகு நாணயங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றின் கால அளவீடுகள் பற்றிய வெளிநாட்டு வரலாற்றாசிரியர்களின் கருத்துக்களைப் பார்க்கும்போது, ஈழத்தில் மூத்த குடிகளாக தமிழர்கள் இருந்துள்ளனர் என்பது நிரூபணமாகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், அண்மையில் குருந்தூர்மலையில் தொல்லியல் திணைக்களம் நடத்திய அகழ்வாராய்ச்சியின்போது சிவலிங்க வடிவத்திலமைந்த சின்னம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குருந்தூர்மலையில் பௌத்த அடையாளங்களைத் தேடிச் சென்ற தொல்லியல் திணைக்களத்துக்கு சிவலிங்கம் கிடைக்கப் பெற்றமை பேரதிர்ச்சியை ஏற்படுத்தவே செய்யும்.

இருந்தும் அவர்கள் குருந்தூர்மலையில் கிடைத்த சிவலிங்க வடிவம் சிவலிங்கம் அல்ல என்றும் அது பௌத்த விகாரைகளில் அமையப்பெற்ற தூண்களின் அடிப்பாகம் என்றும் கதை கூறுகின்றனர்.

ஆனால், சிவலிங்கம் என்பது இலிங்கம் எனும் உற்பவத்தைக் குறித்துரைப்பதாகும்.

அதாவது இலிங்கோற்பவ வடிவத்தையே சிவாலயத்தின் மூலஸ்தானத்தில் அமைந்துள்ள சிவலிங்கம் பொருள்படுத்தி நிற்கிறது.

இந்தப் பிரபஞ்சத்தின் இயங்கு நிலையும் தாம்பத்திய வாழ்வும் தெய்வீகமானது என்பதை உணர்த்தும் குறியீடே சிவலிங்க வடிவமாம்.

இங்கு சிவலிங்கத்தின் தத்துவத்தை உணரமுடியாத தொல்லியல் திணைக்களம் குருந்தூர்மலையில் கிடைத்தது சிவலிங்கம் அல்ல என்றும் அது பௌத்த விகாரைகளைத் தாங்கும் தூண்களின் அடிப்பாகம் என்றும் விளக்கம் கூறுகின்றது.

இதைப் பார்க்கும்போது கடவுளே! பூரண துறவை மேற்கொண்டு போதிமரத்தின் கீழ் இருந்து பரிநிர்வாணம் அடைந்த கௌதம புத்தபிரானை வழிபாடாற்றுகின்ற விகாரைத் தூணின் அடிப்பாகம் சிவலிங்க வடிவில் அமைந்தது என்றால், அது புத்தரின் போதனைக்குப் பங்கமாக அமைந்துவிடும் அல்லவா?

ஆக, கௌதம புத்தபிரானின் தத்துவத்தையும் சிவலிங்க வடிவம் உணர்த்தும் உண்மைத் தத்துவத்தையும் புரிந்து கொண்டு கருத்துரைப்பது தொல்லியல் திணைக்களத்தின் மீதான நம்பகத்தன்மைக்கு அவசியமாகிறது.

எதுவாயினும் குருந்தூர்மலை விவகாரத்தில் எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை களமிறங்கி உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும்.

# தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய 50 மில்லியன் டொலர் ஒதுக்கீடு

(கொழும்பு)

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ஒக்ஸ்போட் அஸ்ராஜெனெகா கோவிசீல்ட் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஒதுக்கியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிதி மூலம் 9 மில்லியன் கொவிட்-19 தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

இராஜதந்திர மட்ட நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்படும் என அவர் கூறினார். (நி-4)

## விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

நீர்ப்பாசன திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தொழில்நுட்ப சேவைத் தொகுதி 3 இன் கீழ் தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்றுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை 2021.03.05 ஆம் திகதிக்கு முன்னர் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,நீர்ப்பாசனத்திணைக்களம், இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு நேற்று 12 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானியைப் பார்வையிடவும். (4)

## ரவி,அர்ஜுனுக்கு எதிரான வழக்கு விசாரணை வரும் ஏப்ரலில்

(கொழும்பு)

முன்னாள்நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கும் அர்ஜுன் அலோசியஸிற்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை ஏப்ரல் முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நிதி அமைச்சராக ரவி கருணாநாயக்க செயற்பட்ட காலப்பகுதியில், பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் குழுமப் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் ஊடாக பெற்றுக்கொண்ட 11.68 மில்லியன் நிதியை பயன்படுத்தி கொள்ளுப்பிட்டி வீடமைப்பு தொகுதியில் சொகுசு வீடொன்றை வாடகைக்கு பெற்றமை, அதற்கு ஒத்தாசை வழங்கியமை உள்ளிட்ட ஆறு குற்றச்சாட்டுகளின் கீழ் பிரதிவாதிகள் இருவருக்கும் எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.(நி-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அராலிப் பிரதேசம், ஆஸ்பத்திரி வீதியில் வேம்படி சந்தியிலிருந்து கஸ்தூரியார் வீதி சந்தி வரை, மகாத்மா வீதி, முனீஸ்வரன் வீதி, கந்தப்பசேகரம் வீதி, யாழ்போதனாவைத்திய சாலை, யாழ்.போதனா வைத்திய சாலையின் மூன்று மாடிக் கட்டடத் தொகுதி, கொமர்ஷல் வங்கி, தேசியசேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, Tilko விடுதி, சுகாதார சேவை நிலையம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆண்கள் விடுதி, யாழ்ப்பாணம் கார்கில்ஸ் பி.எல்.சி, அபி கட்டடம், லங்கா ஒறிக்ஸ் லீசிங் கொம்பனி பி எல் சி, யாழ்.ஹோட்டல் பிறைவேற் லிமிற்ரெட், யாழ்.மதர் கெயார் பிறைவேற் லிமிற்ரெட், மீசாலை புத்தூர் சந்தி, அல்லாரை, வெள்ளம் பொக்கட்டி, கச்சாய், கெற்பெலி, கொடிகாமம் பிரதேசம், வரணி, சுட்டிபுரம், நாவற்காடு, குடமியன், மிருசுவில் வடக்கு, இயற்றாலை, மந்துவில், கரம்பைக்குறிச்சி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி, சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, லீலா ஆலை, சந்திரிகா அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்**மாலை 2 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் நகரம், அரசாங்க அதிபர் அலுவலகம், மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, பூட் சிற்றி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வலிமை பெறுபவன் இவனே

❖ ஒருவரிடம் அன்பு இல்லாவிட்டால், அவரிடம் எவ்வளவு கல்வி ஞானம் இருந்தாலும் கடவுளை அடைய முடியாது.

❖ இறைவனுக்கு உருவமில்லாமல் இருக்கலாம். ஆனால் உருவ வழிபாடு கேலிக்குரியதல்ல.

❖ தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

❖ நீ கடலை கடக்க விரும்பினால் இரும்பைப் போன்று மன உறுதி உன்னிடம் இருந்தாக வேண்டும். மலைகளைத் துளைத்துச் செல்வதற்கு போதுமான வலிமை உனக்கிருக்க வேண்டும்.

❖ மூடப்பட்டுள்ள கதவை எப்படி தட்ட வேண்டும், எப்படி தேவையானபடி தாக்க வேண்டும் என்பது தெரிந்து கொண்டால் உலகம் தனது ரகசியங்களை வெளியிடத்தயாராக இருக்கிறது. மனதை ஒருமுகப்படுத்துபவனுக்கே வலிமை கிட்டும். உள்ளத்தின் ஆற்றலுக்கு எல்லையே இல்லை.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 300

# பெப்ரவரி 10 உலக அவரைகள் தினம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கண்ணுக்கு தெரியாத நுண்ணங்கியினால் உலகம் முடங்கியவேளை உள்ளூர் உற்பத்திகளுக்கு மவுசு ஏற்பட்டதனை நாம் விரைவில் மறந்து போகலாகாது. அதே நிலைமை மீண்டும் மாறிமாறி வரலாம் என்பதனை பலரும் உணர்ந்து அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மைக்ரோசொப்ற் இனது தலைவர் பில்கேட்ஸ் உலகம் இன்னும் கொரோனா போன்ற வேறு விதமான பிரச்சினைகளை குறிப்பாக நோய்களை எதிர்காலத்தில் பாரதூரமாக எதிர் கொள்ள நேரிடும் என கூறியிருக்கின்றார்.

இதுபோல முன்னரும் அவர் எதிர்வுகூறியதை நகைப்புக்குள்ளாக்கி உலகம் கவனிக்கத் தவறியதாலேயே இவ்வளவு உயிரிழப்புக்களும் என சுருக்கமாகக் கூறலாம்.

இவ்வாறான நெருக்கடிகளுக்குள் உலகம் தனது அதீத செயற்பாடுகளை முன்பு போல முன்னகர்த்தியாக வேண்டும்.

முன்பிருந்த நிலையிலிருந்தாவது உயர்ச்சி பெறுமென்பதற்கு அதிகமாக நாம் முயற்சிக்க வேண்டியிருக்கும். பொருளாதார அபிவிருத்தியென்பது எதிர்பார்த்தளவில்லாது உலகத்தில் பல்வேறு மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றது.

இந்த மாற்றத்தை உலகம் எதிர்பார்ப்பாக இனி வருங்காலத்தில் உணரத் தலைப்படலாம். அதற்குத் தகுந்தாற்போல் எமது பயிர்ச் செய்கை நடைமுறை மற்றும் உணர்வு திட்டமிடல்களையும் மாற்றியமைக்க வேண்டியிருக்கின்றது.

உணவுப்பஞ்சம் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம் அனைத்து நாடுகளிலும் உற்பத்தியை அதிகரிப்பதற்கு திணறியமையாகும். இது ஒரு பாரியளவிலான தாக்கமாக பல நாடுகளில் உணரப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் இவ்வாறான சமநற்ற பொருளாதாரம் அந்தந்த நாடுகளையே பல வழிகளிலும் தவிக்க விட்டிருக்கின்றது. தொடர்ச்சியாக உலக உணவு மற்றும் விவசாய தாபனம் ஆபிரிக்க மக்களின் உணவு பற்றியும் ஊட்டச்சத்தான உணவு பற்றியும் உலக நாடுகளை விழிப்படைய வைத்திருக்கின்றது.

அதே பிரச்சினை மற்றைய நாடுகளுக்கும் வரக்கூடிய சாத்தியக்கூறுகளையும் புலமையாளர்கள் வெளிப்படுத்தி வருகின்றார்கள். இனிவரப் போகின்ற காலத்தில் கொரோனா வைரஸ் டன் எமது மக்களின் ஊட்டச்சத்தான உணவு பற்றிய விழிப்புணர்வு அவர்களது நோயெதிர்ப்பு தன்மை மற்றும் வீறுடன் வெளிக்கொணரும் வைரஸின் தாக்கம் மக்களில் உணராமல் இருப்பதற்காக அவர்களது வாழ்க்கை முறையை செம்மைப்படுத்தி பாரம்பரிய உணவு மூலம் தேகாத்திரமாக இருக்க வழிசெய்தல் வேண்டும்.

இந்த வகையில் உணவில் புரதச்சத்தை அதிகளவில் உட்கொள்வதற்காக அவரைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். எமது பிரதேசத்தில் புரதச் சத்தை அதிகளவில் மக்களுக்கு கிடைக்கச் செய்வதற்காக அவரைப் பயிர்களை பயிர்ச்செய்கை திட்டங்களுக்குள் உள் வாங்குதல் மிகவும் அவசியமாகும்.

குறிப்பாக உழுந்தினுடைய விலை எகிறியதற்கு உற்பத்தி போதாமல் இருந்ததும் அதனது இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதும் காரணமாகும்.

ஒரு கிலோ உழுந்தின் விலை 2000. ஒரு கிலோவினால் உள்ளூரில் அவரைச் செய்கையை அதிகரிக்கச் செய்வதற்காக நடத்தப்பட்ட நாடகமாகவும் கருதலாம்.

எது எப்படியாக இருந்தாலும் உழுந்து, பயறு, கௌபீ, பயறு, போஞ்சி, நிலக் கடலை, அவரை, சிறகவரை, எனப் பட்டியலிட்டே செல்லலாம்.

அவ்வாறாக அனைத்து அவரைப் பயிர்களையும் உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல் அவற்றை முறையாக களஞ்சியப்படுத்தலும் அவசியமானதாகும்.

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 313**




மேலும் அதிகம் பயன்பாட்டிலில்லாத அவரைப் பயிர்களை எவ்வாறு பயனுள்ளதாக மாற்றியமைக்கலாம் என்பதற்கு மேற்கொண்டு செய்யப்படும் ஆய்வுகளும் முறையாக கண்காணிக்கப்படல் அவசியமாகும். புதிய வகை உணவுகளை உற்பத்தி செய்வதற்கு ஊக்கப்படுத்தப்படவும் வேண்டும்.

அந்த வகையில் புரத உணவுகளை அதிகம் கொண்ட உணவுப் பயிர்களை பயிர் செய்வதற்கான காலம் கனிந்திருக்கின்றது எனலாம். 1994 ஆம் ஆண்டு உலகளாவிய அவரைக்கான வருடமாக அறிவித்திருக்கின்றார்கள். அவரைத் தாவரங்களை தெரிந்தெடுத்து அவற்றை எமது பிரதேசங்களில் பயிரிடுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் உலக உணவு மற்றும் விவசாய தாபனம் அவரைப் பயிர்களின் தேவையையும் மற்றும் அதனது ஊட்டச்சத்தின் அளவினையும் மையப்படுத்தி அவை பயிரிடப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி இருக்கின்றார்கள்.

குறிப்பாக அவரைப் பயிர்கள் வளியிலுள்ள தழைச் சத்தை மண்ணினுள் நிலைநாட்டுவதற்கு பலவழிகளிலான பொறிமுறைகள் இனங்காணப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான பொறிமுறைகளை அவரைத்தாவரம் கொண்டிருப்பதனால் அவற்றின் பயன்பாட்டை முழுமையாக அனைத்து மக்களும் பெற வழி செய்தல் நல்லது. இதில் வீட்டுத் தோட்டத்தின் பங்களிப்பு முக்கியமானது.

அவரைத் தாவரங்கள் இலகுவாகவும் மலிவாகவும் பெறக்கூடியதாக இருப்பதனால் அவற்றை நாம் வளர்த்து முழுமையான பயனை பெறமுடியும். மேலும் இத் தாவரங்கள் மண்ணை வளமாக்கும் தன்மை கொண்டுள்ளதால் அவற்றுக்கு அதிகளவிலான பசளைப் பிரயோகமும் தேவையற்றதாகி விடுகின்றது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அவரைத் தாவரத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு, மாணவர்களுக்கு எனப் பலருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அவரைத் தாவரங்களை சேமிப்பதில் பிரச்சினைகள் உருவாவது தவிர்க்க முடியாது. சேமிக்கும் கொள் கலன் களுக் குள் அவரைத் தாவரங்களை நன்றாக உலர்ந்தபின் சேமித்தல் என்றுமே நல்லது.

நன்றாக உலராமல் சேமித்தால் பூஞ்சணங்கள் தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. மேலும் பூஞ்சணங்களையும் தாண்டி அதில் பூச்சி பீடைகளும், சிற்றுண்ணிகளும் அதிகமான அழிவினை ஏற்படுத்துவதாக அறிய முடிகின்றது.

பயிர்ச் செய்கையில் அனைத்து பொறிமுறைகளையும் பாவித்து சிறந்த பயிரை அறுவடை செய்தபின் அந்த நிலத்தில் இருக்கின்ற கிடைக்கக் கூடிய தாவர மீதிகளில் இவ்வாறான பீடைகள் பல்கிப் பெருக வாய்ப்புக்கள் அதிகமானதாகும்.

சிறந்த முறையில் பராமரித்தால் சேமிப்பில் உள்ள பீடைகளை அழிக்கவும் அவரைப் பயிர்களின் விதை போன்றவற்றை பாதுகாப்புடன் இலகுவாகப் பெறவும் வழி கிடைத்து விடும்.

அந்த வகையில் அவரைப் பயிர்களுக்கான முக்கியத்துவத்தை பயிர்ச்செய்கையிலும் அவற்றை பொதி செய்து காட்டுவதிலும் இன்னும் அவற்றை மதிப்பேற்றஞ் செய்வதற்கு அவசியம் சுமகால தொழில் நுட்பம் முழுவதுவாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

# தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் முறுகல்

## தனிவழி செல்கின்றாரா ராதா எம்.பி?



(கொழும்பு)

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அ.அரவிந்தகுமார் எம்.பியை, தமிழ் முற்போக்குக் கூட்டணியிலிருந்து இடைநிறுத்திய நிர்வாகக் குழு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை மலையக மக்கள் முன்னணியிடம் ஒப்படைத்தது.

எனினும், மலையக மக்கள் முன்னணி இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக அரவிந்தகுமாரை கட்சியில் தக்கவைத்துக் கொள்வதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அடுத்துவரும் தேர்தல்களில் மலையக மக்கள் முன்னணி இல்லாமல்தான் போட்டியிட வேண்டும் எனத் தொழிலாளர் தேசிய சங்க உறுப்பினர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இவ்விடயம் உட்பட மேலும் சில காரணங்களாலேயே சர்ச்சை ஏற்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கில் நேற்றும்...

கிழமை 689 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

அவர்களில் வட மாகாணத்தில் 15 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி யாழில் ஆறு பேருக்கும் மன்னாரில் ஐந்து பேருக்கும் முல்லைத்தீவில் நான்கு பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## சந்தை வியாபாரி...

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட மினிபஸ் நடத்துநரின் மனைவி மற்றும் பிள்ளை ஆகியோருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ம-3,18,33)

## வட மாகாணத்...

உள்ளூர் பொதுமக்களிடம் ஏற்பட்ட தொற்றில் குறித்த வகை வைரஸ் இல்லை எனவும், இதனால் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் பரவிவரும் கொரோனா வைரஸின் அதிக பரிமாற்றத்தைக் கொண்ட பி1.1.7 பரம்பரைக்கு சொந்தமான புதிய மாறுபாடு கொழும்பு, அவிசாவளை, பியகம மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் தொற்றாளர்களிடம் பெறப்பட்ட மாதிரிகளில் கண்டறியப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவம் நிறுவனத்தின் பணிப்பாளர், மருத்துவர் சந்திமா ஜீவந்திரா அறிவித்திருந்தார்.

அதுதொடர்பில் விளக்கமளிக்கையிலேயே வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-3,33)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## பிரதமருடைய..

படும் என பிரதமருடைய கருத்து அல்லது அறிக்கை சட்டம் அல்ல..! அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விளக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழப்போரின் நல்லடக்கம் தொடர்பான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கருத்து நிபுணர்களின் பரிந்துரைகளுக்கு அமைய கூறப்பட்டிருக்க வேண்டிய கருத்தாகும்.

மேலும் அது பிரதமரின் கருத்து மட்டுமேயாகும். அது ஒருபோதும் சட்டம் ஆகாது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் முக்கியஸ்தர் ஹரித்த அலுத்கே கூறினார். (ம-3)

## தமிழ் மக்கள்..

தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் முன்னெடுத்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இவ்வாறான பேரணியால் அரசை ஒருபோதும் பலவீனப்படுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை எனவும், இதுவரையில் குற்றச்சாட்டுக்கள் எவையும் ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் இலங்கை விவகாரத்தில் ஒருதலைபட்சமாகவே செயற்படுகின்றார் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அடிப்படை கொள்கைக்கு முரணானது எனவும், ஆனால், இம்முறை இலங்கைக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பலம் கொண்ட நாடுகள் செயற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ம-3)

## +936...

னாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 74,052ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## கொரோனாவால்...

முந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 384 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## பிரதமரின் கூற்...

சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸினால் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்குவதாக பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்து, மறுநாள் அவரின் கூற்றுக்கு மாறாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்திருந்த கருத்து தொடர்பாக கரு ஜயசூரிய பதிவிட்டுள்ள டுவிட்டர் அறிவிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## ரணில்...

சந்திப்பொன்று நடந்துள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சந்திப்பின் போது அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை சம்பந்தமாக இருவரும் விரிவாக கலந்துரையாடியுள்ளதுடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

இதனடிப்படையில் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிராக செயற்படவும் இதற்காக ஏனைய எதிர்க்கட்சி அரசியல் சக்திகளை இணைத்துக் கொள்வது சம்பந்தமாகவும் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

## அரசிலிருந்து..

நடக்காது எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்சவின் வீட்டில் அவரது தலைமையில் நடைபெற்ற அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். (ம-3)


தன நிதானய
திகதி - 2021.02.12
சீட்டிழுப்பு இலக்கம் - 433
R 53 58 63 68

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 12.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2691
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 04 32 38 54

மஹஜன சம்பத
திகதி 2021/02/12
சீட்டிழுப்பு இலக்கம் 4396
C 8 0 7 8 3 5

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/02/12
சீட்டிழுப்பு இலக்கம் 1574
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 25 29 50 62

மெகா பவர்
திகதி 12/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0763
B 07 39 41 57 74

அத கோடிபதி
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1192
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 12.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 107,532,900
வெற்றி இலக்கங்கள் 19 27 45 69 V
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3522
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 12.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,388,832
வெற்றி இலக்கங்கள் 11 14 18 38 G
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 4,657,323/=
வெற்றி இலக்கங்கள் 15 18 31 46 சிம்மம்
திகதி: 12.02.2021
வெற்றி வாரம்: 3073
வர்ணம்: கடும் நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,251,700

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1366
சீட்டிழுப்பு திகதி 12/02/2021
நிறம் இளஞ் சிவப்பு
தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் X 12 29 50 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் 68,471,846/=

ஜய
689
பச்சை
12.02.2021
வெள்ளி
I 16 50 56 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,000,000
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## அனைத்து பாடசாலைகளுக்கும் சுத்தமான குடிநீர் வசதி பெற்றுக்கொடுக்கப்படும்

### அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

குடிநீர் வசதி இல்லாத பாடசாலைகளுக்கு விரைவாக குடிநீரை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நீர்வழங்கல் அமைச்சில் நேற்று இடம்பெற்ற அமைச்சின் முன்னேற்ற மறுஆய்வு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் பல பாடசாலைகளில் சுத்தமான குடிநீர் வசதி இல்லாமல் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் குடிநீர் வசதி இல்லாத பாடசாலைகளுக்கு விரைவாக குடிநீரை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதுதொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கவேண்டும்.

குறிப்பாக கிராமப்புறங்களில் இருக்கும் பாடசாலைகளிலேயே இந்த பிரச்சினை அதிகமாக இருப்பதாகவே தெரிவிக்கப்படுகின்றது. என்றாலும்பொதுவாக அனைத்துபாடசாலைகளிலும் சுத்தமான குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் குடிநீர் வசதி இல்லாத பாடசாலைகள் தொடர்பாக அறிவிக்க மாறு மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கு ஏற்கனவே அறிவித்திருக்கின்றோம். அதன் பிரகாரம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-03)

## வாகனம் குடைசாய்ந்து நல்லூரில் விபத்து!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நல்லூர் ஆலயத்திற்கு பின் பகுதியில் பருத்தித்துறை வீதிக்கு அருகில் மின் கம்பங்களை தூக்கும் போது வாகனம் குடைசாய்ந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



விபத்தில் பணியாளர்கள் எவருக்கும் எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ம-03.33)


பதவி வெற்றிடம்
முகாமைத்துவ உதவியாளர்
கணனியில்
தமிழ் ரைப்பிங் செய்யக்கூடிய
முகாமைத்துவ
உதவியாளர் தேவை.
(பெண்கள்)
முகாமையாளர்
கல்யாண மாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
☎- 076 097 3121

FALC FRENCH LANGUAGE CENTRE
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Classes
V. Jegan(Trained in France) (C-1363)
19 பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
23/2, சோமசுந்தரம் அவெனியு. சுண்டிக்குளி. 0779789456 கச்சேரி Fuel Station அண்மையில்
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

ஹோட்டல் மனேஜ்மன்ட்
அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்


பயிற்சிக் காலத்தில் ரூ.1 லட்சம் வரை வருமானம்
100% வேலைவாய்ப்பு
இலவச ஆங்கில வகுப்பு
தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்
ஆரம்பம் 20.02.2021 சனிக்கிழமை
+Certificate in Hotel and Resort Management LKR - 30,000 (520 hrs)
+Certificate in International Cookery & Culinary Arts LKR 60,000 (600 hrs)
T.P: 076 057 9999, 021 314 6171
No.1544, K.K.S Road, Jaffna. (C-1425)

வேலை வாய்ப்பு
இலங்கையின் முதற்தர தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் பணிபுரியும் வாய்ப்பு...
O/L அல்லது A/L கற்றவர்களுக்கு 20,000/= - 45,000/= வரை மாத வருமானமாக பெற்றுக் கொள்ளும் தொழில் வாய்ப்பு. அனுபவமற்றவர்களுக்கு பயிற்சி, சான்றிதழ்களும் வழங்கப்படும்.
INNER CIRCLE (PVT) LTD.
தொடர்பிற்கு :
076 770 7759
(Sms, Viber, WhatsApp)
No. 100/3, 3rd Floor,
முட்டாசுக் கடைச்சந்தி, யாழ்ப்பாணம்.
FB :- Innercircle in SriLanka.
(5647)


வேலையாள் தேவை
ஈர அரிசி அரைத்து வறுக்க, மில்லிற்கு ஆண் / பெண்
இருபாலாரும் தேவை.
சம்பளம்: 1500/= இற்கு மேல் (C- 1426)
☎- 077 936 1356

மணமகள் தேவை
யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர் (அரச), பாவம் 31, திருவோண நட்சத்திரம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (5425)
077 512 2931

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

கணக்காளர் நிறுவனத்திற்கு கீழ்வருவோர் தேவை
* கணக்கியல் உதவியாளர் : கணக்காய்வு, கணக்கியலில் அனுபவமுடையவர்கள்.
* கணக்கியல் பயிலுனர் : A/L வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்தவர் (CHARTED, CIMA, HNDA) மாணவர்கள். (5644)
077 953 0496

வேலையாள் தேவை
யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது வியாபாரக் கட்டடத்தைப் பராமரிப்பதற்கு வயறிங், பிளம்பிங் வேலை தெரிந்த 35 - 50 வயதிற்கு இடைப்பட்ட திருநெல்வேலியில் இருந்து 2 Km இற்குள் வசிக்கும் ஒருவர் தேவை. (5644)
075 099 9243

PERSONAL CLASS
இரசாயனவியல் A/L 2021 - 2022
Repeat Batch, Past Papers
கற்பிக்கப்படும். (5463)
சி. அங்கதன் B.Sc (Chem. Spl. )
075 436 4510

காணி விற்பனைக்கு
கொழும்புத்துறை, பிரதானவீதி, கணக்கர் சந்திக்கு அருகில் 1 பரப்பு 3 குழி உடைய காணி விற்பனைக்கு உண்டு.
( தரகர் தேவையில்லை. ) (5646)
076 654 5987

ஜோதிடம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாகக் கணித்து தருகின்றோம்.
உரும்பிராய் (5597)
077 572 9724

A/L MATHS
GROUP CLASS
For English and Tamil Medium students
By : MATHY
(B.Sc., More than10 years teaching experience in abroad) (5036)
076 132 5353
No. 87/6, Brown Road, Jaffna.

PEARSON INTERNATIONAL COLLEGE
Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.
# Weekday classess
# Weekend Classess
# Personal Classes
# Group Classes
# Lecturers are above band 8 Scorers and professionally qualified
98% Students In IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province
Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsonicollege@gmail.com
idp IELTS
No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna

அண்ணா EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 075 3305500 (C-1357)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

உள்நாடு, வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை
DHL உள்நாடு யாழ். - கொழு. கொழு. - யாழ். 12 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்
வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது.)
Lanka Cargo Worldwide Express
315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 283 2397
076 485 4092
(5633)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-1374)
0768226240 DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.